Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 04 (06.02.2003) வியாழக்கிழமை இதழ் :127






நம்பியார்- பிரிகேடியர் சில்வா, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா சகிதம் யாழ். செயலகம் வருவதை முதலாவது படத்திலும், பொது அமைப்புக்களின் பிரதிநிதியொருவர் வரைபடம் மூலம் விளக்கம் அளிப்பதை இரண்டாவது படத்திலும், சந்திப்பு முடிந்த பின் சரத் பொன்சேகா வாகனத்தைச் செலுத்த நம்பியார் பயணமாவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில் இராணுவ நலனை கைவிடமுடியாது

## என்கிறார் லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார்



(நமது நிருபர்)

**உயர் பாதுகாப்பு வலயத்தினுள் மக்கள் மீளக்குடியமரும் விவகாரத்தில் பாதுகாப்பு விடயங்களை புறந்தளளச் சிந்திக்க முடியாது. அதனைக் கருத்தில் எடுக்காவிடில் அமைதி முயற்சிகளே ஆபத்திற்குட்படலாம் என- நேற்று யாழ். செயலகம் வந்திருந்த இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற உயரதிகாரி லெப்ரினன்ட் ஜெனரல். சதீஸ் நம்பியார் தெரிவித்தார்.**

உயர் பாதுகாப்பு விவகாரம் சம்பந்தமாக, யாழ். மாவட்ட பொது அமைப்புக்களை யாழ் .செயலகத்தில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

பொது அமைப்புக்களின் கருத்துக்களை கேட்டறிந்த பின்னர் அவர் பேசும்போது மேலும் தெரிவிக்கையில்- நான் ஓய்வுபெற்ற ஒரு இராணுவ உத்தியோகத்தன். நான் இந்திய அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இங்கு வரவில்லை. நான் இந்திய அரசின் பேச்சாளனுமல்ல. நான் ஒரு சாதாரணன்.

ஆனால், எனக்கிருக்கும் தனிப்பட்ட தகைமை (PERSONAL CAPACITY) காரணமாக இலங்கை அரசாங்கம் இவ்விடயத்தில் ஆலோசனை கூறும்படி கேட்டது.

நீங்கள் பலகாலமாக பிரச்சினைகளைக் கொண்டிருககிறீர்கள். (10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான நடவடிக்கைகளில் இந்தியத் தலையீடு வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ வாஜ்பாயிடம் கோரிக்கை

(புதுடெல்கி)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் இந்திய அரசு நேரடியாக தலையிடவேண்டும்.

- இவ்வாறு மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அழைப்பின் பேரில் அங்கு சென்ற மகிந்த ராஜபக்ஷ, பிரதம மந்திரி வாஜ்பாயை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பு நேற்று மாலை இடம்பெற்றது.

மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை இனப்பிரச்சினையில் சிங்களவர்கள், முஸ்லிம்கள் மற்றும் மிதவாதத் தமிழர்கள் இந்தியாவின் மேலதிக பங்களிப்பு அவசியம் என்று கருகிறார்கள், எதிர்பார்க்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

# பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நம்பியாருடன் செயலகத்தில் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.படை அதிகாரிகள் புடைசூழ முன்னாள் இந்திய இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியார் யாழ்.நகருக்கு நேற்று விஜயம் செய்தார்.

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிளிலும் செயற்படும் பல்வேறு வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளை யாழ்.செயலகத்தில் சதீஸ் நம்பியார் சந்தித்தார்.

நேற்று மாலை 3 மணிக்கு சற்று முன்னரே யாழ்.அரசஅதிபரின் அலுவலகம் களைகட்ட ஆரம்பித்து விட்டது. பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் நம்பியாரின் வருகைக்காகக் காத்து நின்றனர்.

சரியாக 3.07 நிமிடமளவில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# நினைவுச்சின்னம் இன்று திறப்பு திருமலையில் மக்கள் உறுதி

## கடற்படை மறுப்பதால் பதற்றம்

(திருகோணமலை)

திருகோணமலை கோபாலபுரத்தில் மாவீரர் நினைவுத்தூபி இன்று திறந்து வைக்கப்படுவது தொடர்பாக பொதுமக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் இழுபறி நிலை ஆரம்பமாகியுள்ளது.

விடுதலைப்புலிகளின் இருபத்திரண்டு போராளிகள் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதி கடற்படையினருடன் நடைபெற்ற மோதலின்போது வீரச்சாவினைத் தழுவிக்கொண்டனர்.

இவர்களின் பதின்மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் போது மரணித்த மாவீரர்களுக்கு நினைவுத்தூபியினை (10 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு அப்பாவி மக்களின் சிவில் உரிமை


## ராணுவ விடயமாகப் பார்க்காதீர்-மாவை

(நமது நிருபர்)

எமது மக்களுக்கு ஏற்கனவே ஒரு நம்பியாரைத் தெரியும் அந்த நம்பியார் எமது மக்கள் மத்தியில் வில்லனாகப் பிரபலமானவர். இவ்வாறு- யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா - சதீஸ் நம்பியாருடனான நேற்றைய சந்திப்பில் தனது பேச்சை ஆரம்பித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் புன்முறுவல் பூத்தபடி அதை ஆமோதித்த லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார், எல்லா நம்பியார்களும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



**நம்பியாற்ர தீப்பு வில்லத்தனம் மட்டுமில்ல வில்லங்கமானதும்தான் பார்த்தியளோ...!**

# உயர் பாதுகாப்பு வலயம் பற்றி அறிய அமெரிக்க அதிகாரி இன்று வருகின்றார்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயம் குடாநாட்டு மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம் என்ன என்று அறிந்து கொள்வதற்காக இன்று தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்கப் பிரதிநியும், இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரியுமான டேவிட் குட் யாழ்ப்பாணம் விஜயம் செய்கின்றார்.

இன்று காலை விமானம் மூலம் யாழ்ப்பாணம் வரும் அமெரிக்க அதிகாரி டேவிட் குட், யாழ்.நகரில் பலவேறு தரப்புக்களையும் சந்தித்து உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான உண்மை நிலையை அறிந்து (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
(சி-518) 01-505632, 074-612656, 01-390128

# ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் தகவல் தொடர்பாடல் நிலையம்

## யாழ். வளங்கள் பற்றிய புள்ளிவிபரம் சேகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்தின் உதவியுடன் செயற்படவுள்ள தகவல் தொடர்பாடல் நிலையத்தின் திறப்புவிழா வைபவம் நாளை நடைபெறவுள்ளது.

இத்தகவல் தொடர்பாடல் நிலையமானது - விவசாய அறிவிற்கும் அதன் செயல்முறை பிரயோகத்திற்கும் இடையேயான இடைவெளியை இணைக்கும் பாலமாக அமைவதை நோக்கமாகக் கொண்டது.

இந்நிலையம் - யாழ்ப்பாணத்தின் வளங்கள், தொழில்நுட்பத்திறன், கல்விசார் ஆராய்ச்சி, பயிர்கள் - கால்நடை - மீன்கள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் செயற்திறன் பற்றிய புள்ளிவிபரத்தைச் சேகரிக்கும்.

இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவாகள் - தகவல் தொடர்பாடல் நிலையம், கோணாவளை ஒழுங்கை, விவசாய பீடம் முன்பாக, திருநெல்வேலி எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

# சங்கீத பூஷணம் பட்டம் பெற்ற முதல் கத்தோலிக்க தமிழ்ப் பெண்

### மறைந்தார் மாண்பு

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்ற முதல் இலங்கைக் கத்தோலிக்க தமிழ் பெண்மணியான திருமதி இராசம்மா மரியாம்பிள்ளை காலமானார்.

இவர் மலேசியாவில் பிறந்தவர். சிறு வயதில் கரவெட்டியில் கலைஞர் எம்.பெரியசாமியிடம் கர்நாடக இசைபயின்று பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி நெறியை மேற்கொண்டு ஆசிரியரானார்.

வீணை, வயலின் ஆகிய வாத்தியங்களை இசைக்கக்கூடிய வல்லமை பெற்றவர். இதைவிட ஆர்மோனிய வாத்தியத்தை விசேடமாகக் கற்றவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலமைப்பரிசில் பெற்ற ஈழத்து மாணவர் என்ற பெருமையுடன் ஈழமாணவர் மன்றத் துணைத்தலைவராகவும் சேவையாற்றினார்.

1986 இல் ஓய்வுபெற்ற இவருக்கு 1998 இல் இலங்கை கலாசார அமைச்சினால் கலாபுஷணம் விருது வழங்கப்பட்டது.

பாடசாலை நாட்களில் இவர் நெறிப்படுத்திய பல 'புதிய ஆக்கங்கள்' அகில இலங்கைரீதியில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

-எம்.வி.ஆர்

# இலங்கையில் அமைதி ஏற்படுமென உலகம் எதிர்பார்த்திருக்கிறது

## அஸ்கிரிய மகாநாயக்கர் கூறுகிறார்

(கொழும்பு)

அனைவரும் நாட்டு நலனைக் கருத்தில் கொண்டாலே இங்கு அமைதிநிலை தோன்றும். அனைவரும் நாட்டில் அமைதி ஏற்படுவதையே எதிர்பார்த்திருக்கின்றனர் என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் உடுகம புத்திர கித்த தேரோ தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் மஹிந்த சமரசிங்கவைச் சந்தித்து பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் இலங்கையில் அமைதி ஏற்படவேண்டும் எனக் காத்திருப்பதாகவும், இந்த அமைதியை ஏற்படுத்த அனைவரும் பாடுபடவேண்டும் என்றும் அஸ்கிரிய மகாநாயக்கர் மேலும் தெரிவித்தார்.

# உலக இந்து மாநாடு மே முதல் வாரம் ஆரம்பம்

## மொரிஷியஸ் பிரதமரும் கலந்து கொள்கிறார்

இரண்டாவது உலக இந்து மாநாடு கொழும்பில் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை நடைபெறும்.

அங்குரார்ப்பண வைபவம், பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மணடபத்தில் மே மாதம் 2 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

மொரிஷியஸ் நாட்டின் பிரதம மந்திரி, இந்திய அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர், சிங்கப்பூர் அமைச்சர்கள் மற்றும் ஆதீன காத்தாக்கள் உட்பட சமயப் பெரியார்களும் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

உலகின் பல பாகங்களிலிருந்தும் பேராளர்களும் பார்வையாளர்களும் சமுகமளிக்கவுள்ளனர். நான்கு நாட்களிலும் கொழும்பிலுள்ள பிரதான மணடபங்களில் கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. மிகச்சிறந்த இந்திய, இலங்கைக் கலைஞர்கள் இவற்றில் பங்குபற்றவுள்ளனர். இந்து கலாசாரத்தையும் வரலாற்றையும் பிரதிபலிக்கும் கலாசாரக் கண்காட்சியும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, பதுளை ஆகிய நகரங்களில் பிராந்தியக் குழுக்கள் அமைக்கப்பட்டு இம மாநாட்டினை ஒட்டியதாகப் பிராந்திய மாநாடுகள் நடைபெறவுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து வருகைதரவுள்ள ஆதீன முதல்வர்கள், ஆய்வாளர்கள், கலைஞர்கள் ஆகியோரும் பிராந்திய மாநாடுகளிற் பங்கேற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநாடு தொடர்பாக இரண்டு தொகுதிகளாக ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் ஆராய்ச்சி பூர்வமான கட்டுரைகள் அடங்கிய சிறப்பு மலர்கள் வெளியிடப்படவுள்ளன.

# முல்லைக்குத் தேவையான ஆசிரியரில் ஐம்பது சதவீதமான இடங்கள் வெற்றிடம்!

## மாவட்டக் கல்விவளர்ச்சி பாதிக்கப்படும் அபாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாணவர்களின் தொகைக்கேற்ப பணிபுரியவேண்டிய ஆசிரியர்களின் தொகையில் - 50 வீதமானோரே தற்போது அங்கு பணியாற்றி வருவதாக - மாவடடக கல்வி வட்டாரங்கள் தெரிவிததன.

முல்லை மாவட்டத்தில் பயலும்- 18,926 மாணவர்களுக்கும் 1176 ஆசிரியாகள் தேவையாகவுள்ளபோது, தற்போது 587 ஆசிரியர்கள் மட்டுமே பணியாற்றிவருவதாகவும் தெரிவித்த அம்மாவட்டக் கல்வி வட்டாரங்கள்,

இவர்களில் 241 பேர் தொண்டராசியர்கள் என்றும், 42 பேர் பகுதி நேர ஆசிரியர்கள் என்றும் தெரிவித்தன.

இந்தநிலை - முல்லைத்தீவு மாவட்டக் கல்வி வளர்ச்சியைப் பெரிதும் பாதித்து வருகின்றது.

### மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி

தேசிய ஒருமைப்பாட்டு செயற்திட்டப் பணியகத்தினால் யாழ். மாவட்ட 1 ஏ பி பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான வதிவிட தலைமைத்துவ பயிற்சி யாழ். பரியோவான் கல்லூரியில் வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடாத்தப் படவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு யாழ். மாவட்ட 1 ஏ பி பாடசாலைகளில் இருந்து 4 மாணவத் தலைவர்கள் வீதம் பங்குபற்ற வேண்டும். பங்குபற்றும் மாணவத் தலைவர்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரிக்கு சமூகமளிக்க வேண்டும் எனவும், இவர்களுக்கான உணவு வசதிகள் தேசிய ஒருமைப்பாட்டுப் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனவும், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.


## எழுந்திரு! விழித்திரு!

### சுவாமி விவேகானந்தர் கண்காட்சி

இடம் : யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி

திகதி : 07.02.2003 காலை 10 மணிக்கு (புதிய நேரம்)

அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

**பாடசாலை மாணவர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.**

*முக்கிய குறிப்பு:*
ஸ்ரீஇராமகிருஷ்ண ஆச்சிரமம், மைசூரில் (இந்தியா) தயார் செய்த 40 படங்கள் - மொத்தச் செலவு - ரூபா 15 இலட்சம். தமிழ் ஆங்கிலத்தில் விளக்கக்குறிப்புக்கள் உண்டு.

செயலாளர்,
ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(சி/565)

District Mine Action Office, Jaffna

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்

**Vacancy**

A vacancy exists in the UNDP funded District Mine Action Office in Kachcheri for the post of translator.
The candidate should be educated up to GCE A level,

- Good languages skills in English and Tamil, knowledge in Singhala will be appreciated
- Competence in Computer
- Have experience in Tamil to English and English to Tamil translation

Please send in your application with the relevant documents to ***District Mine Action Office, Kachcheri, Jaffna* before Monday 11th February 03.**

Candidates who are shortlisted for interview will be contacted by the end of the week.

District Mine Action Office, Secretariat, Jaffna,
மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ். செயலகம், யாழ்ப்பாணம்

(சி563) *T.P. 021 - 222 3886 Email: dmaojafi@ dialogsl. net*

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு

விஜய்,ஸ்நேகா நடித்த

வசீகரா




10.30, 2.30, 6.00,9.30 (சி-545)

ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

எம்.ஜீ.ஆர்., ராதாசலூஜா நடித்த

இதயக்கனி

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி

THE MUMMY RETURNS (சி-544)


# கசிப்பு விற்பனைக் கோஷ்டி குருநகரில் சிக்கிக்கொண்டது

(கொழும்புத்துறை)

குருநகர் மத்தியூஸ் வீதி என்னுமிடத்தில் நீண்டகாலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த கோஷ்டி ஒன்று பொலிஸாரிடம் சிக்கியது.

நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த மேற்படி கோஷ்டி தொடர்பாக பொதுமக்கள் புகார் செய்ததை அடுத்து - சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் பெருமளவு கசிப்பினை கைப்பற்றியதோடு சிலரைக் கைதும் செய்தனர்.

# இன்றைய நாள் இனிய நாள்

**06-02-2003 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| **மேடம்** | :- தொழில் சிறப்பு, பொருள்வரவு, மனமகிழ்ச்சி, வாக்கு வசீகரம். |
| **இடபம்** | :- பிரயாணக்கஷ்டம், தேகசுகக்குறைவு, தாழ்ந்தநிலை, தூக்கக்குறைவு. |
| **மிதுனம்** | :- தனலாபம், களஸ்திர சுகம், பூமி வாகன யோகம், இல்லச்சிறப்பு. |
| **கர்க்கடகம்** | :- குடும்பக்கவலை, பொருட்சேதம், அதிகஅலைச்சல், கோபமிகுதி. |
| **சிங்கம்** | :- வாகன மூலமான செலவு, பூமிலாபம், அதிகபிரயாசம், மகிழ்ச்சி. |
| **கன்னி** | :- இலட்சுமீகரம், காரியசித்தி, மனமகிழ்ச்சி, இல்லச்சிறப்பு. |
| **துலாம்** | :- ஆயுதபீடை, விஷபயம், தாழ்ந்தநிலை, குடும்பக்கவலை. |
| **விருச்சிகம்** | :- சுபகாரியவெற்றி, குடும்பமகிழ்ச்சி, தனதானிய விருத்தி. |
| **தனு** | :- திருடர்பயம், தேகமெலிவு, பிரயாணக்கஷ்டம், மனக் கவலை. |
| **மகரம்** | :- தார புத்திர மகிழ்ச்சி, களஸ்திரசுகம், இனசனக் கொண்டாட்டம். |
| **கும்பம்** | :- சத்துரு பீடை, காலில் ரோகம், தேகபலவீனம், சிநேக நன்மை. |
| **மீனம்** | :- காரியவெற்றி, தனலாபம், களஸ்திர மகிழ்ச்சி, நன்மை. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

# மாகாணசபைத் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்தலாம்!

## சுதந்திரக்கட்சி மாநாட்டில் தீர்மானம்

நாட்டில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு மக்கள் ஆதரவு அதிகரிப்பதனால், தற்போதைக்குப் பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துவதில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய சுதந்திரக்கட்சியின் மத்திய குழு இத்தீர்மானத்தினை எடுத்துள்ளது. எனினும், மாற்று அரசாங்கம் ஒன்று அமைப்பது தொடர்பான முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மாகாண சபைகள் பலவற்றின் பதவிக்காலம் முடிவடையவிருப்பதால், மாகாணசபைகளுக்கான தேர்தலை நாடாளவிய ரீதியில் நடாத்துவதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

### அராலிப் பகுதியில் சட்டவிரோத மின்பாவனை

அராலி வடக்கு, அராலி மேற்குப் பகுதியில் சிலர் சட்டவிரோதமாக மின சாரம் பெற்று வருவது அதிகரித்து வருகின்றது.

இவ்வாறு சட்டவிரோத மின்சாரம் பெற்று வருவதனால் அந்தப்பகுதிகளில் அடிக்கடி மின் விநியோகம் துண்டிக்கப்படுவதுடன், விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன.

இந்த சட்டவிரோத மின்பாவனையைத் தடைசெய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (118)

# மாரப்பன மீது நம்பிக்கையில்லை; 18 இல் நாடாளுமன்றில் விவாதம்!

(கொழும்பு)

இம்மாதம் 18 ஆம் திகதியன்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் நடாளுமன்றத்துக்கு வரவுள்ளது.

இது தொடர்பாகத் தகவல் வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ -

எதிர்க்கட்சியினர் - மேற்படி விவாதம் சம்பந்தமாகப் பலமுறை கேட்டிருந்தும், அதற்குச் சம்மதிக்காத ஆளுந்தரப்பினர் தற்போது வேறு வழியில்லாததால், இந்த விவாதத்துக்குச் சம்மதித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாகப் பேசிய பின்பே இம்மாதம் 18 ஆம் திகதியன்று விவாதத்தை நடாத்தும் அனுமதி கிடைத்தது என்றார்.

### பருத்தித்துறையில் கிராம அலுவலர்களுக்கு தரமுயர்வு

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் பணி புரிந்த 9 கிராம சேவை அலுவல்கள் ஜனவரி மாதம் முதல் - தரம் 1 இறகுத் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

இ.இராசேந்திரம், சோ.வசந்தகுமார், இ.புலேந்திரன், தி.சுபேந்திரராசா, வே.வளளமரம், க.பாலச்சந்திரன், நா.குமரகுருபரநாதன், சோ.கிருஷ்ணராசா சி.யோகநாதன் ஆகியோரே தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

கிராம சேவையாளர் சேவையில் பதினைந்து வருட சேவையைப் பூர்த்தி செய்த கிராம அலுவலர்களுக்கே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (31)

### கோண்டாவிலில் 1008 சங்காபிஷேகம்

கோண்டாவில் கிழக்கு அருள் மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானத்தில் நாளை வருடாந்த சங்காபிஷேக தினத்தை முன்னிட்டு காலை 10 மணிக்கு ஸ்ரீ வல்லிபுர நாதவரதராஜ பெருமாளுக்கும், பூதேவி ஸ்ரீதேவி அம்மையாருக்கும் 1008 சங்காபிஷேகமும், விசேட அன்னதான நிகழ்வும் நடைபெறவுள்ளது.

# ஏ-9 வீதியின் திருத்தப்பணிகள் ஆரம்பம்; 3 முதல் 5 வருடங்கள் தாக்குப்பிடிக்கும்!

## எட்டுப் பகுதிகளூடாக வீதிகள் பெருப்பிக்கும், பலமாக்கும் வேலைகள்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் யாழ். - கண்டி வீதியில் 93 கிலோமீற்றர் நீளப் பாதையின் திருத்தவேலைகள் இம் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அவசரப் புனரமைப்பு - வீதி வேலை, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஒமந்தையிலிருந்து மிருசுவில்வரை செய்யப்படுகிறது. வீதி 3 தொடக்கம் 5 வருடங்கள் வரை தாக்குப்பிடிக்கக் கூடியதாகவும், ஒரு வருடகாலத்தினுள் பூர்த்தியடையக்கூடியதாகவும் பணி திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வீதியின் முழு அகலம், நடைபாதை உட்பட 28 அடியாகவும் ஓடுபாதை 20 அடியாகவும் அமைக்கப்படவுள்ளது.

இவ்வீதியின் புனரமைப்புப் பணிகளில் எட்டு ஒப்பந்தக்கார நிறுவனங்கள் ஈடுபடவுள்ளன.

ஒமந்தை தொடக்கம் புதூர்ச் சந்தி வரை - 11 கிலோமீற்றர்கள் தூரத்திற்கான வேலைகளை - 'ஆலோசனைகள் பொறியியலாளர்கள் நிறுவனம்' மேற்கொள்ளவுள்ளது. இவ்வீதியின் குறிப்பிட்ட தூரம் வரை 6 அங்குல தடிப்புக்குக் கிரவலிட்டு, அதன் மேல் 3/4 பகுதி கல்லிட்டு இரட்டைப்படைத் தார் ஊற்றப்படவுள்ளது.

புதூர் சந்தி தொடக்கம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலம் வரையான 4 கிலோமீற்றர் தூரத்திற்கு - 6 அங்குல தடிப்புக் கிரவலிட்டு 3/4 பகுதி கல்லிட்டுத் தார் ஊற்றப்படவுள்ளது.

அத்துடன் - பணிக்கன்குளம் தொடக்கம் முறிகண்டிவரை 6 கிலோமீற்றர் தூரத்திற்குக் கல்லிடப்பட்டுத் தார் ஊற்றப்படவுள்ளது. இப்பணிகளை 'கே.டீ.ஏ.வீரசிங்க அன் கம்பனி' மேற்கொள்ளவுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்படும் பாலம் தொடக்கம் பணிக்கன்குளம் வரையான 10 கிலோமீற்றர் வீதிப் புனரமைப்புப் பணிகளை 'சீ.எம்.எல். எட்வேட்ஸ் ஒப்பந்தக்காரர் லிமிடெட்' மேற்கொள்ளவுள்ளது. இவ்வீதி 3/4 பகுதி அங்குலத்திற்குக் கல்லிடப்பட்டுத் தார் ஊற்றப்படவுள்ளது.

முறிகண்டி தொடக்கம் பரந்தன் வரையான 18 கிலோமீற்றர் வரையான திருத்தப்பணிகளை 'வீதி அபிவிருத்தி நிர்மாணக் கம்பனி' மேற்கொள்ளவுள்ளது. இவற்றில் 11 கிலோமீற்றர் வரையும் 5 மீற்றர் அகலத்திற்கு பணி முடிவடைந்து விட்டது. இதன் இரு பக்கங்களும் கிரவலிட்டு 6 மீற்றர்வரை இரட்டைத் தார் ஊற்றப்பட்டு 8.4 மீற்றர் அகலப்படுத்தி 6 மீற்றர் அகலத்திற்கு 3/4 பகுதி அகலத்திற்கு கல்லிடப்பட்டு ஒற்றைப்படை தார் ஊற்றப்படவுள்ளது.

பரந்தன் தொடக்கம் இயக்கச்சி வரையான 13 கிலோமீற்றர் பாதை திருத்தப்பணிகளை 'தென்பகுதி சிவில் நிர்மாணக் கம்பனி' மேற்கொள்ளவுள்ளது. 2000 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்ட பாதை 5 மீற்றர் அகலத்திற்கு 1/2 இஞ்சி கல்லிட்டு ஒற்றைப் படைத் தார் ஊற்றப்படவுள்ளது.

இயக்கச்சி தொடக்கம் பளை வரையான 12 கிலோமீற்றர் வீதிக்கான திருத்தப்பணிகளை - 'அக்சஸ் இன்ரநெஷனல் கம்பனி' மேற்கொள்ளவுள்ளது. இவ்வீதி 6 மீற்றர் அகலத்திற்குக் கல்லிடப்பட்டு ஒற்றைப்படைத் தார் ஊற்றப்படவுள்ளது.

பளை தொடக்கம் மிருசுவில் வரையான 8 கிலோமீற்றர் வீதி திருத்தப்பணிகளை 'ஷக்கானி இன் ஜினியரிங் கம்பனி' மேற்கொள்ளவுள்ளது. இவ்வீதி 6 மீற்றர் அகலத்திற்கு 3/4 பகுதி கல்லிடப்பட்டுத் தார் ஊற்றப்படவுள்ளது.

### உடுப்பிட்டி விபத்தில் சிறுவன் காயம்

(நவிண்டில்)

உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அண்மையில் லொறி - மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் சிறுவன் ஒருவன் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த திங்களன்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் உடுப்பிட்டி இமையாணனையைச் சேர்ந்த பா.பழனிவேல் (வயது 15) என்பவரே காயமடைந்தவராவார். (116)

# வட-கிழக்குப் பிரச்சினையைத் தவிர அனைத்திலும் ஜே.வி.பி. ஒற்றுமை

## மகிழ்ச்சியடைகிறார் ஜனாதிபதி சந்திரிகா



பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் - ஜே.வி.பிக்கும் இடையே வட-கிழக்குப் பிரச்சினையைத் தவிர ஏனைய விடயங்களில் ஒத்தகருத்து ஏற்பட்டுள்ளது. இருக்கும் வேறுசில வேறுபாடுகள்கூட அடுத்த மாதத்திற்குள் களையப்பட்டுவிடும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய கொள்கைவகுக்கும் பிரிவான அதன் மத்திய குழுவில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் சுமார் மூன்று மணித்தியாலங்களாக நடைபெற்ற இக்கூட்டத்தில் பேசிய அவர்- 20 சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களின் செயற்பாடுகளில் தனக்குத் திருப்தியின்மை ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்.

இதேவேளை - தற்போதைய அமைதி முயற்சிகள் பற்றியும் வட-கிழக்கு நிலவரம் தொடர்பாகவும் ஆராயவுமென - மகிந்த ராஜபக்ஷ, அநுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, அலவி மௌலானா, நிமால் ஸ்ரீபால டீ சில்வா, சுசில் பிறேம ஜயந்த ஆகியோரடங்கிய குழுவும் அப்போது அமைக்கப்பட்டது.

# 'இந்தியன் மிக்ஸ்' சிறார் உணவு புற்றுநோயைத் தரும் ஆபத்து

## மருத்துவ வட்டாரங்களில் அதிர்ச்சி

(கொழும்பு)

'திரிபோஷா'வுக்குப் பதிலாக - குழந்தைகளுக்கு வழங்குவதற்கென இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட - 'இந்தியன் மிக்ஸ்' என்ற உணவு-மனிதப் பாவனைக்கு உகந்ததல்ல எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த உணவு - பக்ரீரியா மற்றும் பங்கசுக்களால் தாக்கப்பட்டிருப்பதுடன், இதனை உண்போருக்குப் புற்றுநோய் ஏற்படக்கூடிய ஆபத்து இருப்பதாக-மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் - இந்த உணவு விநியோகிக்கப்பட்டபோதே அது தெரியவந்தது.

இதையடுத்து தொன் கணக்கிலான 'இந்தியன் மிக்ஸ்' உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படுவதற்குத் தடைசெய்யப்பட்டு, சீல் வைக்கப்பட்டுள்ளது.

இந்த உணவை உண்ட சிறார்கள் - வயிற்றுப்போக்கினாலும், வாந்தியினாலும் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து - விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோது - உணவு பழுதடைந்திருந்தது தெரியவந்தது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா சுதந்திரதினக் கொண்டாட்டம் ரத்து

# மக்கள் பங்கேற்காததற்கு யார் பொறுப்பு; இராணுவ-பொலிஸ் உயரதிகாரிகள் மோதல்!

(கொழும்பு)

வவுனியாவில் மக்கள் பங்கேற்பு இல்லாததால் சுதந்திரக் கொண்டாட்டத்தை ஒட்டிய இசைநிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டது தொடர்பாக வன்னிப் பிராந்திய இராணுவத் தளபதிக்கும், வவுனியா மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் இடையே கடுமையான வார்த்தைப் பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளன.

இந்த நிகழ்வுகளில் மக்களின் பங்கேற்பு இல்லாததற்குப் பொலிஸாரே காரணம் என்றும், மக்களை அழைப்பதில் அவர்கள் திறமையுடன் செயற்படவில்லை என்றும் வன்னிப் பிராந்திய இராணுவத் தளபதி கண்டித்ததைத் தொடர்ந்து,

இம்மோதல் நடைபெற்றதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இது தொடர்பாக வன்னிப் பிராந்திய இராணுவத் தளபதி- பாதுகாப்பு அமைச்சிற்கு முறையிட்டதைத் தொடர்ந்து இது பற்றிய விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் சுதந்திர தினத்தை - கறுப்பு நாளாக அனுஷ்டிப்பதென பொது அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்கவே மேற்படி நிகழ்வுகளில் தமிழ்மக்கள் பங்கேற்கவில்லை என்பது தெரிந்ததே.



தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் யாழ். குடாநாட்டின் பொதுசன அபிப்பிராயத்தினை ஆய்வு செய்வதற்காக ரோக்கியோ பல்கலைக்கழக அரசறிவியல் பேராசிரியை சுஷிவா மற்றும் கொழும்பைச் சேர்ந்த அரசறிவியல் ஆய்வாளர் கலாநிதி ஜெகான் பெரேரா ஆகியோர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்களைப் படத்தில் காணலாம்.

# விவசாயிகளுக்குத் தேவையான கருவிகள் வாடகைக்கு வழங்குவதற்குத் திட்டம்!

## குடாநாட்டிலும் பல்வேறு இடங்களில் மையங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு விவசாயிகளது செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கும் வகையிலான புதிய செயற்திட்டம் ஒன்று மிக விரைவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்த ஆண்டில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் 'நியாப்' திட்டத்தின் ஒரு அங்கமாகவே இப்புதிய செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி, யாழ். மாவட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து வகையான இயந்திரங்கள், கருவிகள் போன்றவற்றைக் கொள்வனவுசெய்து அவற்றை விவசாயிகளின் பாவனைக்காகக் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறு இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி செயற்திட்டம் தொடர்பாக தற்போது களநிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மிக விரைவில் இச்செயற்திட்டம் தொடர்பாகச் சாத்தியக்கூற்று அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு 'நியாப்' தலைமைச் செயலகத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்படவுள்ளது. (க)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் : கு.ஜக்ஸன்

முகவரி : ஜேர்மனி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------

பெற்றார் ஒப்பம்


### ஊர்காவற்றுறை நீதிமன்றம் புதிய கட்டடத்தில்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நீதிமன்றம் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

நீண்டகாலமாக, பொலிஸ் நிலையக் கட்டடத்திலேயே இயங்கிவந்த நீதிமன்றம், சுருவில் வீதியில் அமைந்துள்ள வேறொரு கட்டடத்தில் இயங்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக வாடகை சம்பந்தமான விடயத்தை வீலை மதிப்பீட்டுத் திணைக்களம் ஆராய்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 11

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

நீரிழிவு நோய்க்குப் பல்வேறு மருந்துகள் இப்பொழுது பயன்படுத்தப்படுகின்றன. வைத்தியர் சிபார்சு செய்யும் மருந்தை அவர் கூறியாங்கு பயன்படுத்தவேண்டும். வைத்தியரின் ஆலோசனையின்றி மருந்து பயன்படுத்துவதை நிறுத்தக்கூடாது. திடீரென மருந்து பயன்படுத்துவதை நிறுத்துவது ஆபத்தான நடவடிக்கையாகும்.

**நீரிழிவுள்ள குடும்பத்தில் பிறந்தோருக்கு ஏற்படும் நீரிழிவின் படிமுறை வளர்ச்சி**

நீரிழிவு இல்லாத குடும்பத்தில் பிறந்தவர்களைத் தோட்டா பொருத்தப்படாத துப்பாக்கிக்கும், நீரிழிவுள்ள குடும்பத்தில் பிறந்தோரைத் தோட்டா பொருத்தப்பட்ட துப்பாக்கிக்கும் ஒப்பிடலாம். தோட்டா பொருத்தப்பட்ட துப்பாக்கியின் வில், ஏதோ ஒரு காரணத்தினால் (விபத்தினாலேனும்) தட்டுப்பட்டால் துப்பாக்கி வெடித்துவிடும். இதேபோல, நீரிழிவுக் குடும்பத்தில் பிறந்து, நீரிழிவு மரபணுக்களைக் (GENE) கொண்டிருப்பவர்கள் உணவு, உடலுழைப்புப் போன்ற எல்லாவற்றிலும் வெகு அவதானமாக இருக்காவிட்டால் எந்த ஒரு சிறு தவறும் நீரிழிவை ஏற்படுத்திவிடும்.

நீரிழிவின் படிமுறை வளர்ச்சியைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

1 ஆம் கட்டம் - நீரிழிவு மரபணுவுடன் பிறத்தல்.
2 ஆம் கட்டம் - நீரிழிவு இருப்பதும் இல்லாமற் போவதுமான நிலை. (சிலவேளைகளில் சிறுநீரில் குளுக்கோஸ் காணப்படல்).
3 ஆம் கட்டம் - நீரிழிவு இருக்கும். உணவுக் கட்டுப்பாட்டில் கட்டுப்படும்.
4 ஆம் கட்டம் - நீரிழிவு இருக்கும். வாய்வழி மருந்தால் கட்டுப்படும்.
5 ஆம் கட்டம் - இன்சுலின் ஊசியினாலேயே கட்டுப்படும்.
6 ஆம் கட்டம் - கண், சிறுநீரகம், இதயம், நரம்புகள் பாதிக்கப்படல்.

**நீரிழிவைக் கட்டுப்படுத்தும் முறைகள்**

(1) உணவுக் கட்டுப்பாடு
(2) உணவுக் கட்டுப்பாடும், அப்பியாசங்களும்.
(3) வாய்வழி மருந்துகளைப் பயன்படுத்தலும், உணவுக்கட்டுப்பாடும்.
(4) இன்சுலின் ஊசிமருந்தைப் பயன்படுத்தலும், உணவுக் கட்டுப்பாடும். ஆகிய நான்கு வழிகளில் இப்பொழுது நீரிழிவு நோய் கட்டுப்படுத்தப்படுகிறது.

**எம்முன்னோர் நீரிழிவைக் கட்டுப்படுத்திய முறைகள்**

எமது முன்னோர் 6 பட்டிப் பூக்களை அதிகாலையில் அவித்துக் குடித்தும் நாவல் கொட்டையை வறுத்து இடித்துக் கோப்பிக்குப் பதிலாகக் குடிப்பதும், குறிஞ்சா இலையை உண்டும், மாங்காய் பருப்பை அவித்துக் குடித்தும் இந்த நோயைக் கட்டுப்படுத்தினராம்.

**நீரிழிவு நோயாளிகள் கவனத்தில் கொள்ளவேண்டியவை**

1) ஒழுங்காக நீரிழிவு மீசிகிச்சையகத்திற்கு (DIABETIC CLINIC) சென்று, வைத்தியர் கூறுமாறு ஒழுகி, தரப்படும் மருந்துகளை நேரம், அளவு தவறாது பயன்படுத்த வேண்டும்.
2) விரதம், மீதூண் (அளவுக்கு அதிகம் உண்ணல்), மது அருந்துதல், புகை பிடித்தல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.
3) வாகனப்புகை மிகுந்த இடங்கள், இரைச்சல் மிகுந்த இடங்கள், தொற்று நோயாளிகள் இருக்குமிடங்களைத் தவிர்த்து வாழ வேண்டும்.
4) கோபம், பதற்றம், மனஅழுத்தம் தவிர்த்து வாழவேண்டும்.
5) முகத்தை அடிக்கடி கழுவிச் சுத்தம் செய்வது போலக் காலையும் அடிக்கடி கழுவிச் சுத்தம் செய்து நன்றாக ஈரத்தை ஒற்றி எடுத்துவிட வேண்டும்.

*(தொடரும்)*




நமது ஈழநாடு வழங்கும்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

பரிசுப் போட்டி

MEGA

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: இரத்தினம்ஸ்

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

30, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

அசோசியேட்டட் மோட்டார் வேய்ஸின் (AMW) அங்கீகரிக்கப்பட்ட யமஃகா, மோட்டார் சைக்கிள்கள், வெளி இணைப்பு இயந்திரங்களின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000



வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்யாட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!

வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!



உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது?
(......................)

2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது?
(......................)

3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன?
(......................)

4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்?
(......................)

5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது?
(......................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'

நமது ஈழநாடு,

267, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------

வயது: ------------------------------

முகவரி: ------------------------------

------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*




உழைப்போம் உயர்வோம்!
தொழில் மலர்

# நிறமூட்டிகளால் உணவின் தரம் சீர்குலையும் அபாயம்!

உணவுப் பொருட்களின் தரத்தினைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியாக அதன் நிறம் விளங்குகின்றது. எனவே, நுகர்வோரைக் கவரக்கூடிய கவர்ச்சியான நிறத்தை வழங்குவதற்காக நிறமூட்டிகள் உணவுப் பொருட்களைத் தயாரிப்பவர்களால் சேர்க்கப்படுகின்றன.

இந்நிறமூட்டிகள் இயற்கையானவையாக அல்லது செயற்கையானவையாக இருக்கலாம். உணவுப்பொருட்களில் இயற்கையான நிறமூட்டிகளைச் சேர்ப்பது பண்டையகாலம் தொட்டு இருந்துவரும் ஒரு நடைமுறையாகும்.

இத்தகைய ஒரு இயற்கை நிறமூட்டியான மஞ்சள் எமது மக்களின் உணவு வகைகளில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. இது உணவுப் பொருட்களுக்குக் கவர்ச்சியான நிறத்தைக் கொடுப்பது மட்டுமல்லாமல் ஒரு கிருமிநாசினியாகவும் செயற்படுகிறது.

இதைவிடத் தாவரங்களிலிருந்து பெறப்படும் பச்சையம், காற்றின் பிளேவின், சவ்றன் போன்றவையும் இயற்கையான நிறமூட்டிகளாக உணவுப் பொருட்களில் தற்போது பாவிக்கப்படுகின்றன.

இவை உடலுக்குத் தீங்கு விளைவிக்காத நிறமூட்டிகள் ஆகும். ஆனால் இன்று கண்ணைக் கவரும் நிறங்களைக் கொண்ட செயற்கை நிறமூட்டிகள் பாவனைக்கு வந்துள்ளன. இவற்றின் மிதமிஞ்சிய பாவனை ஏராளமான பக்க விளைவுகளை எமது உடலில் ஏற்படுத்தலாம்.

எனவே, இந்நிறமூட்டிகளைப் பற்றிய ஒரு அறிமுகம் எல்லோருக்கும் அவசியமானதே. இன்று உலகில் ஏறத்தாழ 3500 வகையான நிறமூட்டிகள், பதப்படுத்திகள், ஒட்சியேற்ற எதிரிகள், சுவையூட்டிகள் உணவுப்பொருட்களின் தரத்தினை மேம்படுத்துவதற்காக பாவிக்கப்படுகின்றன. இவற்றில் சில பாதுகாப்பானவை. மேலும் சில தீய விளைவுகளைத் தரக்கூடியன. எனவே இவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு நாடுகள் பல்வேறுபட்ட சட்டங்கள் இயற்றியுள்ளன.

இலங்கையரசும் இத்தகையதொரு உணவுப் பாதுகாப்புச்சட்டத்தை (Food Act No. 26 of 1980) 1980 ஆம் ஆண்டு கொண்டு வந்தது. இந்தச் சட்டத்தில் உணவுப்பொருட்களை உற்பத்தி செய்பவர்கள், விற்பனை செய்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியில் உணவுப்பொருட்களை உற்பத்தி செய்பவர்கள் அவற்றைப் பொதிசெய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

அதன்படி பொதி செய்யப்பட்ட உணவுப்பொருட்களின் மேலுறையில் அவ்வுணவுப்பொருள் தயாரிப்பதற்குப் பயன்பட்ட மூலப் பொருட்களை நிறை அடிப்படையில் இறங்கு வரிசையில் குறிப்பிட வேண்டும். இறுதியில் உணவுப் பொருட்கள் தயாரிப்பில் சிறிய அளவில் பயன்படுத்தப்பட்ட நிறமூட்டிகள், சுவையூட்டிகள், பதப்படுத்திகள் போன்றவற்றின் "E" இலக்கங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

நிறமூட்டிகள், சுவையூட்டிகள் போன்றவற்றின் இரசாயனப் பேருக்குப் பதிலாக "E" இலக்கத்தைப் பயன்படுத்தும் முறை ஐரோப்பிய பொருளாதார சங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்கள் உணவினுள் சேர்ப்பதற்கு பாதுகாப்பானது என ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்ட நிறமூட்டிகள், சுவையூட்டிகள் போன்றவற்றுக்கு இலக்கங்களைக் கொடுத்துள்ளார்கள்.

பொதுவாக நிறமூட்டிகளின் "E" இலக்கங்கள் "E" 100 இற்கும் "E" 180 இற்கும் இடைப்பட்டதாக இருக்கும். இலங்கையில் 1980 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி மஞ்சள், பச்சை, நீலம், சிவப்பு நிறங்களுக்குப் பொறுப்பான 10 செயற்கை நிறமூட்டிகளை உணவுப்பொருட்களுக்கு நிறமூட்டிகளாகப் பாவிப்பதற்கு அனுமதியளித்துள்ளார்கள்.

இந்நிறமூட்டிகளைத் தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறமூட்டிகளின் கலவையாகவோ பாவிக்கலாம். ஆனால் அவற்றின் மொத்தஅளவு உண்பதற்கு அல்லது பருகுவதற்குத் தயாராகவுள்ள உணவு அல்லது பானத்தின் கிலோ ஒன்றில் 200 மில்லிகிராமுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

உதாரணமாகப் பாகிஸ்தான் நாட்டில் அமராந்த் (Amaranth E 123) என்ற நிறமூட்டி இனிப்புப் பண்டங்களை நிறமூட்டுவதற்குப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இந்நிறமூட்டியைப் பாவித்து உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை எமது நாட்டில் விற்பனை செய்ய இயலாது. எனவே பாகிஸ்தானில் இருந்து இனிப்புப் பொருட்களை இறக்குமதி செய்யும்போது அவை 'Amaranth' பயன்படுத்தப்படாதவை என்பதனை உறுதிசெய்த பின்பே இறக்குமதி செய்யவேண்டும். அமராந்த் (Amaranth E 123) என்ற நிறமூட்டி இனிப்புப் பண்டங்களை நிறமூட்டுவதற்குப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இந்நிறமூட்டியைப் பாவித்து உற்பத்தி செய்யப்பட்ட உணவுப்பொருட்களை எமது நாட்டில் விற்பனை செய்ய இயலாது.

இலங்கையில் பாவிப்பதற்கு அங்கீகாரம் பெற்ற செயற்கை நிறமூட்டிகளும் அவற்றின் "E" இலக்கங்களும்.

| நிறம் | நிறமூட்டியின் பெயர் | 'E' இலக்கம் |
|---|---|---|
| மஞ்சள் | ரற்றாசின் (Tartrasine) | E 102 |
| | சன்செற் மஞ்சள் FCF (Sunset Yellow FCF) | E 110 |
| சிவப்பு | காமொய்சின் (Carmoisine) | E 122 |
| | பாஸ்ட் சிவப்பு (Fast Red) | |
| | பொன்சூ (Ponceau) | E 124 |
| | எரித்திரோசின் (Erythroseine) | E 127 |
| நீலம் | இன்டிகோகாமைன் (Indugocarmine) | E 132 |
| | பிரில்லியன்ற் நீலம் FCF (Brilldant) | |
| | Blue FCF | E 133 |
| பச்சை | பச்சை S (Green S) | E 142 |
| | பச்சை FCF (Green FCF) | |

மேற்கூறிய 10 செயற்கை நிறமூட்டிகளைத் தவிர்ந்த ஏனைய செயற்கை நிறமூட்டிகளைப் பாவித்து உணவுப் பொருட்களைப் பாவிப்பது, விற்பனை செய்வது எமது நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு உணவுப்பொருட்களில் பாவிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறமூட்டிகள் நாட்டிற்கு நாடு வேறுபடும். எனவே, நிறமூட்டிகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட உணவுப்பொருட்களை வேறு ஒரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும்போது அந்நிறமூட்டிகள் எமது நாட்டில் பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் பெற்றவையா என்பதனை அவதானித்த பின்பே இறக்குமதி செய்யவேண்டும்.

தருவது - தகவல் தொடர்பு மையம்.




எமது உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி இறைச்சி, மீன், மரக்கறி, பழவகை, பால்மா, கட்டிப்பால், கோப்பி, தேயிலை போன்றவற்றிற்கு நிறமூட்டிகளைப் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் பாற்கட்டி (Cheese) வகைகளுக்குத் தாவரங்களிலிருந்து பிரித்தெடுக்கப்படும் இயற்கை நிறமூட்டிகளைப் பாவிப்பது மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உடலுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய நிறமூட்டிகளின் பாவனை சட்டங்கள்மூலம் தடுக்கப்பட்டிருக்கும்போதும் அவை பரவலாக உணவுப் பொருட்களை நிறமூட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்று ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. பொதுவாக 2 நிறமூட்டிகள் இவ்வாறு பாவிக்கப்படுகின்றன. அவை மஞ்சள் நிறத்தைத் தரக்கூடிய துணிகளுக்கு சாயம் போடுவதற்குப் பயன்படும். மெற்ரனில் மஞ்சள் (Metanil Yellow) மற்றும் சிவப்பு நிறத்தைத் தரக்கூடிய றொடமின் B (Rodamine B) என்பனவாகும்.

இவை உணவுப் பொருட்களில் பாவிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட செயற்கை நிறமூட்டிகளைவிட குறைந்த விலையில் கிடைக்கின்றன. ஆனால் இந்த நிறமூட்டிகளை பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட உணவுப்பொருட்களின் பாவனை - புற்றுநோய் போன்ற தீய விளைவுகளை ஏற்படுத்துமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

இது பொதுவாக இனிப்பு வகைகளை நிறமூட்டுவதற்கும் பூந்தி, மஸ்கட் போன்ற மாவினால் செய்யப்பட்ட உணவுப்பொருட்களை நிறமூட்டுவதற்கும் பாவிக்கப்படுகின்றன. இதைவிட கோதுமைமாவுடன் மெதலின் மஞ்சள் நிறமூட்டியும் கலநது உணவுக்குப் பயன்படும் மஞ்சள்தூள் எனக் கூறி, ஒரு கலப்பட வியாபாரம் நடைபெறுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. ஏனைய நிறமூட்டிகளிலிருந்து பின்வரும் சோதனைகள்மூலம் வேறு பிரித்தறியலாம். சந்தேகத்திற்கு இடமான மஞ்சள் நிற உணவு மாதிரிக்கும் ஐதான ஐதரோக்குளோரிக்கமிலம் அல்லது சல்பூரிக்கமிலத்தைச் சேர்க்கும்போது, அது இளஞ்சிவப்ப நிறத்துக்கு மாறினால் அவ் வுணவு மாதிரி தடைசெய்யப்பட்ட மெத லின் மஞ்சள் நிறமூட்டிகளைக் கொண்டி ருக்கின்றதென்ற முடிவுக்கு வரலாம்.

அதேபோல மற்றொரு தடைசெய்யப்பட்ட நிறமூட்டியான றொடமில் B புற ஊதா ஒளியால் (Ub Light) ஒளிரக்கூடிய தன்மை கொண்டது. இத்தன்மையைப் பயன்படுத்தி றொடமில் B நிறமூட்டியை ஏனையவற்றிலிருந்து பிரித்தறியலாம்.




அண்மையில் நாட்டின் பல இடங்களிலிருந்து உணவுப் பரிசோதகர்களால் பெறப்பட்ட உணவு மாதிரிகளை அரசாங்கப் பகுப்பாய்வாளர்கள் பரிசோதனை செய்தபோது ஏறத்தாழ பத்து சதவீதமான உணவு மாதிரிகள் மேற்கூறப்பட்ட தடை செய்யப்பட்ட நிறமூட்டிகளைக் கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

சீ.வசந்தரூபா
(விரிவுரையாளர், விவசாய இரசாயனவியற்துறை, விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

அதிலும் ஒரு வேதனையான விடயம் என்னவெனில், நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இந்நிறமூட்டிகளின் பாவனை ஏனைய பகுதிகளைவிட அதிகமாகக் காணப்பட்டதேயாகும். இதற்குக் காரணம் உணவுப் பாதுகாப்புச் சட்டம் இப்பகுதிகளில் சரியாக அமுல்படுத்தப்படாமை என்பதே தெளிவாகின்றது. இத்தடைசெய்யப்பட்ட நிறமூட்டிகள் குறைந்த விலை உடையவையாக இருப்பதால் நடைபாதை வியபாரிகளும், சிறு உற்பத்தியாளர்களும் தமது இனிப்பு வகைகள், பானங்களுக்கு நிறமூட்டுவதற்கு இவற்றை அதிகமாகப் பாவிக்கின்றார்கள். எமது முன்னோர்கள் இயற்கையான உணவுப் வகைகளை அதிகம் உண்டார்கள். இதனால் அவர்கள் சுகதேகிகளாக நீண்டகாலம் வாழ்ந்தார்கள். ஆனால், நாம் செயற்கையான உணவுப் பொருட்களைச் சேர்த்து பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளையே கூடுதலாக உண்கின்றோம். நம்மிடையே புற்றுநோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இதனாலேயே கூடியுள்ளது எனலாம்.

இதற்கு மேற்கூறப்பட்ட தடைசெய்யப்பட்ட பாவனையும் ஒரு காரணமாக இருக்கலாம். எனவே இவற்றின் பாவனை முற்றாகக் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறமூட்டிகளின் பாவனையும் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் கூறப்பட்ட 200 மி.கிராம்/கிலோ (200mg/1 Kg) அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இதற்கு நிறமூட்டிகளால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள், அவற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய வழிமுறைகள் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்வது அவசியமாகும். இதனை சமூக சிந்தனை உள்ளவர்களும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களும் செய்வார்கள் என்று நம்பலாமா?

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சாவகச்சேரி | திருநெல்வேலி | சுன்னாகம் | ஊர்காவற்றுறை | யாழ்ப்பாணம் | சங்கானை |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றை | 40/- | 50/- | 50/- | 40/- | 60/- | 40/- |
| உருளைக்கிழங்கு | 35/- | 50/- | 40/- | 40/- | 60/- | 60/- |
| கத்தரிக்காய் | 40/- | 60/- | 30/- | 30/- | 60/- | 40/- |
| பாகற்காய் | 40/- | 50/- | 30/- | 35/- | 40/- | 40/- |
| வெண்டிக்காய் | * | 15/- | 20/- | 20/- | 30/- | 60/- |
| கரட் | 40/- | 60/- | 50/- | 40/- | 60/- | 25/- |
| பீற்றூட் | * | 40/- | * | 40/- | 40/- | * |
| வெங்காயம் | 25/- | 25/- | 25/- | 20/- | 30/- | 20/- |
| பச்சைமிளகாய் | 60/- | 50/- | 80/- | 50/- | 60/- | 20/- |

# யாழ். குடாநாட்டில்

யாழ்.குடாநாட்டில் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றிய தொடரின் இன்றைய அத்தியாயத்தில் பருத்தித்துறை கிழக்கு கடற்தொழில் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளின் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம்.

பருத்தித்துறை கிழக்கு கடற்தொழில் பரிசோதகர் பிரிவில் அடங்கும் பகுதிகளாவன -

## அன்றும்

1. கொட்டடி
2. முனை
3. தும்பளை கிழக்கு
4. மணற்காடு
5. குடத்தனை
6. நாகர்கோயில் என்பனவாகும்.

பொதுவாக இப்பிரதேசங்கள் பின்தங்கிய பிரதேசங்களாகவே உள்ளன. ஏனெனில், பௌதீகச் சூழலும், இடஅமைவும் இதற்கான காரணமாக உள்ளன.

முனைப்பகுதியில் 3 1/2 தொன் வள்ளங்கள் கடற்தொழில் நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் நாளொன்றுக்குச் சராசரியாக 150 Kg நிறைக்கு மேற்பட்ட மீன்களைப் பிடிக்க முடியும். இந்த வகையில் இப்பிரதேச மாதாந்த மீனுற்பத்தி சராசரியாக 75,000 Kg ஆகும்.

பருத்தித்துறைகிழக்கு கடற்தொழில் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட கடற்தொழிலாளர்களின் விபரம் பின்வருமாறு,

| பிரதேசம் | குடும்ப எண்ணிக்கை | கடற்தொழிலாளர் எண்ணிக்கை | குடித்தொகை |
|---|---|---|---|
| 1. கொட்டடி | 93 | 91 | 468 |
| 2. முனை | 378 | 370 | 1480 |
| 3. தும்பளை கிழக்கு | 65 | 84 | 251 |
| 4. கற்கோவளம் | 286 | 282 | 1097 |
| 5. பொற்பதி | 86 | 105 | 317 |
| 6. மணற்காடு | 131 | 169 | 531 |
| 7. குடத்தனை | 142 | 153 | 538 |
| 8. நாகர்கோவில் | 262 | 294 | 987 |

இப்பிரதேச மீனவ மக்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகளாவன -

**1. போக்குவரத்து**

# கடற்தொழில் நடவடிக்கைகள்

அத்துடன் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாக இவை காணப்படுகின்றன. இங்கு பெருமளவு, பாரம்பரியமான மீன்பிடி முறையிலேயே கடற்தொழிலில் கடற்தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர்.

இப்பிரதேசத்தில் பெருமளவு பிடிபடும் மீன்களாவன- நெத்தலி, சூடை மற்றும் சிறுமீன் இனங்கள் என்பனவாகும்.

இப்பிரதேச மக்களின பிரதான கடற்தொழில் செய்யும் முறையானது கரைவலை இழுத்தல் என்பதாகும். கரைவலை இழுத்தல் பற்றிய விபரத்தை சென்ற அத்தியாயத்தில் பார்த்திருந்தோம்.

தற்போது நாகர்கோயில் பகுதியிலுள்ள மக்கள் முற்றாக இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். இதனால் தற்போது அப்பகுதியில் கடற்தொழில் நடவடிக்கைகள் முற்றாகத் தடைப்பட்டுப் போயுள்ளன.

இப்பிரதேசத்தில் தற்பொழுது பயன்படுத்தப்படும் மீன்பிடிக்கலங்களின் விபரங்கள்.

1. 28′ - 32′ வள்ளங்கள் - 04
2. F.G.B. (தும்புக் கண்ணாடி வள்ளங்கள்) - 125
3. கட்டுமரங்கள் - 298

## இன்றும்

பல வருடங்களாக இப்பிரதேசத்திற்குரிய பாதைகள் திருத்தப்படவில்லை. குறிப்பாக மணற்காட்டிற்குச் செல்லும் வீதி திருத்தப்படாததில், மீனவர்கள் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். எனவே வீதிகள் திருத்தப்படுதல் முக்கியமானதொன்றாகும்.

**2. சுகாதாரச் சீர்கேடு**

இப்பிரதேசத்தில் மலசலகூட வசதிகள் குறைவாகவே உள்ளன. ஒவ்வொரு வீட்டிற்கென தனித்தனி மலசலகூட வசதியில்லை. இதனால் மழைக்காலங்களில் பெரும் சுகாதாரச் சீர்கேட்டினால் தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் எதிர்நோக்கப்படுகிறது.

**3. மக்களின் கல்வியறிவுக் குறைவு**

இப்பிரதேசம் கஷ்டப்பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளதில் கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை அதிகளவு உள்ளது. மேலும், இப்பிரதேச மாணவர்களின் பாடசாலை செல்லும் வீதம் மிகக் குறைவாக இருப்பதாலும் கல்வியறிவு குறைந்து செல்கிறது. எனவே

**தமிழின்பன்**

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்திசெய்து மாணவர்களின் கல்வித்தரத்தைக் கூட்டுவதற்கு ஆவனவற்றைச் செய்ய வேண்டும்.

***இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்குச் செய்யக்கூடியன.***

1. பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவு வரை கரையோரமாக ஓர் வீதியை அமைப்பதன் மூலம் இரு மாவட்டங்களுக்கிடையில் சிறந்த தரைத்தொடர்பு ஏற்படுத்துவதோடு மட்டுமன்றி, கடலுணவுகளை இலகுவாக தெற்குப் பகுதிக்கு சந்தைப்படுத்தும் வசதிகள் கிட்டும்.

2. உப்பு அரைக்கும் தொழிற்சாலையொன்று நிறுவுதல் மூலம் இப்பகுதியில் பிடிக்கப்படும் பெருமளவு நெத்தலி மீன்களை வீணாக்காது நெத்தலிக் கருவாடாக்கலாம். இதன் மூலம் பொருளாதார விருத்தியையும் உற்பத்திப் பொருளின் பெறுமதியையும் மேலும் அதிகரிக்கலாம்.

3. தற்போது மின்சார வசதியின்மை இப்பிரதேசத்தின் பிரதான குறைபாடாகும். எனவே, மின்சார வசதியை ஏற்படுத்தி ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவி மேலதிக மீன்களை ஐஸ் இட்டுப் பாதுகாத்து சந்தைப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

4.மணற்காட்டுப் பிரதேசம் கற்பாறைகளற்ற கடல் ஆகும். இப்பகுதி சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய இடமாகும். எனவே இப்பிரதேசத்தை சுற்றுலாப் பிரயாணிகளுக்கேற்ற இடமாக மாற்றுவதன்மூலம் பலபேருக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கும் சந்தர்ப்பமாக அமையும். *(தொடரும்)*

# தொழில்வங்கி



| | | |
|---|---|---|
| நிறுவனம்:- | இந்து கலாசார அமைச்சு, இலங்கை. | ஆயப்பகுதி, தமிழீழ விடுதலைப் புலிகள் |
| வெற்றிடமாக உள்ள பதவிகள்:- | விற்பனை உதவியாளர் (கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம்) | பொறியியலாளர், இளநிலை ஆய அதிகாரி, கணக்காய்வாளர். |
| அடிப்படைத் தகுதிகள்:- | க.பொ.த. சாதாரணதரம், உயர்தரம் சித்தி. | பல்கலைக்கழக வணிக/முகாமைத்துவ பட்டதாரி / H.N.D.A. |
| விண்ணப்ப முடிவு திகதி | 10-02-2003 | 13.02.2033 |

தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்- " நமது ஈழநாடு" அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக

## ஓர் அறிமுகம்

இரண்டாந்தரச் சந்தையுடன் தொடர்புடைய பங்குக் கைமாற்றங்கள் கொழும்புப் பங்குச்சந்தையின் தன்னியக்கக் கணினிப்பொறி மூலம் நாளாந்த வேலைநாட்களில், காலை 9.30 - 12.30 மணிவரையிலும் இடம் பெறும். பொதுமக்கள், தரகர் நிறுவனங்கள் மூலமே பங்குச்சந்தையில் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும். இவ்வாறு பங்குச் சந்தையில் தரகர் நிறுவனங்கள் பணிபுரிவதற்கு இரு அடிப்படைக் காரணங்கள் உள்ளன.

1) கம்பனிகளின் நிதி நிலைமைகள் பற்றி மேற்கொள்ளக்கூடிய நிதிப்

அவ்வாடிக்கையாளருக்கு இலக்கமொன்று வழங்குகின்றது.

கணக்கு ஆரம்பிப்பதற்குக் குறித்த வாடிக்கையாளர்களுக்குத் தமது தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைப்பது இன்றியமையாதது. தேசிய அடையாள அட்டையின் இலக்கம் கணக்கின் இலக்கமாக வைத்துக் கொள்ளப் படும். தேசிய அடையாள அட்டை

# பங்குச் சந்தை வர்த்தகம்

பகுப்பாய்வுத் தகவல்களின் அடிப்படையில் அதன் பங்குகள் கொள்வனவு செய்வதற்குத் தெரிவு செய்யப்பட வேண்டும். கம்பனிகளின் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் (இலாப நட்டக் க/கு, ஐந்தொகை) நிதிப் பகுப்பாய்வுத் தகைமையுள்ளவர்களால் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும்.

பங்குச் சந்தையின் தொழிற்பாடுகளில் ஈடுபடக்கூடிய தரகர் நிறுவனங்கள்- நிதிப் பகுப்பாய்வு பற்றிய விசேட தகைமையுள்ளவர்களைப் பணிகளில் ஈடுபடுத்துவதால், அந்நிறுவனங்கள் முதலீடு செய்யக்கூடிய கம்பனிகளைத் தெரிவுசெய்து கொள்வதற்கான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்றன. இப்பணியானது, முதலீட்டாளர்கள் வினைத்திறனாக முதலீடு செய்து கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்கி, அவர்களை முதலீடு செய்வதற்கு ஆர்வமூட்டுகின்றது.

2) தன்னியக்கக் கணினிப்பொறி மூலம் பங்குகள் கைமாற்றங்கள் இடம்பெற்ற போதிலும் அக்கொடுக்கல் வாங்கல்கள் நிறைவுற்றதாகக் கருதமுடியாது. அவை, அக்கொடுக்கல் வாங்கல்களின் ஆரம்ப நிலையாகும். குறித்த ஏதாவதொரு சந்தர்ப்பமொன்றில் தங்கள் பங்குதாரர்களின் விபரங்களைத் திரட்டிக்கொள்ள வேண்டிய சூழ்நிலைகள் கம்பனிகளுக்கு ஏற்படலாம். கம்பனிப் பங்குதாரர் இடாப்பில் பங்குகள் கொள்வனவு செய்துள்ள நபர்களின் பெயர்களைப் பதிவதற்கு, மேற்கொள்ளப் படவேண்டிய பணிகளுக்கான ஆவண நடவடிக்கைகள் பற்றிய விசேட அறிவும் அனுபவமும் இன்றியமையாதது. பங்குச்சந்தைப் பணிகளில் ஈடுபடக்கூடிய தரகர்கள் இவ் அறிவுத் துறையில் சிறந்து விளங்குவதால் அவர்கள் இப்பணிக்காகச் சிறப்புப் பெற்றவர்கள் எனப் பொதுமக்களால் சான்றுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

எனவே - பங்குச்சந்தைத் தொழிற்பாடுகளில் வாடிக்கையாளர்களுக்காகத் தோன்றக்கூடிய தரகர்களும், நடுவர்களும் இவ்விரு முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொள்கின்றனர் என்பதனால் இவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அடுத்ததாகப் பங்குச்சந்தை நடவடிக்கையில் ஈடுபட முதலில் யாது செய்தல் வேண்டும்? முதலில் மத்திய வைப்புத் திட்டத்தில் பிணைக் கணக்கொன்றை (Securities Account) ஆரம்பித்துக் கொள்ள வேண்டும்.

வாடிக்கையாளர் இங்கு கணக்கொன்றை ஆரம்பித்துக் கொள்வதற்குரிய விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து, பங்குபற்றுநர் மூலம் மத்திய வைப்புத் திட்டத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தினைப் பெற்ற CDS - அதிலுள்ள தகவல்களை கணினிப்படுத்தி பங்குபற்றுநர் மூலம் குறித்த வாடிக்கையாளரை இனங்காண்பதற்கு,

இல்லாத சந்தர்ப்பங்களில் வெளிநாட்டுப் பயணிகள் அனுமதிச் சீட்டு (Passport) இலக்கம் இத் தேவைக்காகப் பயன்படுத்தப்படும். முதலீட்டாளர்களுக்கு அவசியமெனக் கருதும் சந்தர்ப்பத்தில் அனைத்துத் தரகர் நிறுவனங்களிலும் பிணைக் கணக்குகளை ஆரம்பித்துக் கொள்ளமுடியும்.

வாடிக்கையாளர் தத்தமது தகவல்களை மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்களும் மத்திய வைப்புத்திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது. கொழும்புப் பங்குச் சந்தையின் வியாபார முறைகள் மூலம் குறித்த பங்குகளுக்கான கைமாற்றல்களை மேற கொள்வதற்கு முன், அப்பங்குகள் மத்திய வைப்புத்திட்டத்தில் வைப்பிலிட வேண்டும்.

பங்குதாரர்கள் - பங்குபற்றுநர்கள் மூலம் முறையாகப் பூரணப்படுத்திய குறித்த பங்குகளுக்கான பங்குப்பத்திரம், விற்பனை ஒப்படைப்புப்பத்திரம், வைப்புப்பத்திரம் ஆகியவைகளை CDS இற்கு அனுப்பிவைக்க வேண்டும். அவ் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட CDS, அவைகளுக்கு இலக்கங்களிட்டு அவை



**இலங்கை மத்திய வங்கி**

கிடைத்தமை குறித்து வைப்புப் பத்திரத்தின் துணைப்பிரதியில் திகதி முத்திரையிட்டு பங்குபற்றுநர்க்கு மீள அனுப்பி வைக்கப் படுகின்றது. பெறப்பட்ட ஆவணங்களை செவ்வைபார்த்து அவற்றினை கணினியில் இட்டு, குறித்த வாடிக்கையாளர் கணக்கில் செலவு வைத்துக் கொள்ளப்படுகின்றது.

குறித்த நாளில் கணினிமூலம வைப்பு அறிக்கை தயாரிக்கப்படும். ஒவ்வொரு வைப்புப்பதிவும் குறித்த பங்குப்பத்திரம், விற்பனை ஒப்படைப்புப்பத்திரம் என்பவைகளுடன் ஒப்பிடப்படும்.

அடுத்துவரும் விற்பனை நாளில் (Trading Day) வைப்புப் பற்றிய உப ஆவணமும் அதில் வைப்புச் செய்துள்ள பங்குகளுக்கான பங்குப் பத்திரமும் குறித்த கம்பனிச் செயலாளருக்கு அல்லது பதிவாளருக்கு CDS நிறுவனத்தின் பெயருக்கு மாற்றுமாறு கேட்கப்படும்.

கம்பனி அந்த ஆவணங்கள் கிடைத்தமை குறித்து உப ஆவணத்தின் மூலப்பிரதியில் கையொப்பமிடுவதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப் படும். குறித்த வைப்புத் தொடர்பாக ஏதாவது பொருத்தமற்ற விடயங்கள் இருக்குமாயின் அது பற்றி CDS நிறுவனத்திற்கு வைப்பு நாளில் இருந்து 3 வியாபார நாட்களுக்குள் செயலாளர் அல்லது பதிவாளரினால் அறிவிக்க வேண்டும்.

**- வசந்தகுமார்.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்
உள்ளே இருக்குதாம் ஈரும் பேனும்.
- தமிழ்ப் பழமொழி

# நமது நோக்கு

## கருகிய நினைவுகளுடன் ஒரு வெண்ணிறக் கட்டடம்

ஈழத்தமிழர்களின் அறிவுக் கருவூலமாக விளங்கிய யாழ். நூலகம் - பேரினவாதத் தீயில் எரிந்து கருகியதை தமிழினத்தின் வரலாறு என்றும் ஒரு மாறாத வடுவாக, ஆறாத ரணமாகவே சுமந்து கொண்டிருக்கிறது.

தென்னாசியாவில் மிகப் பெரும் நூலகம் எமது நூலகம் எனப் பெருமையுடன் உலா வந்தவர்களின் நெஞ்சம் வேகும்படியான நிகழ்வுகளைத் தமிழினம் மறக்கவும் மாட்டாது. மன்னிக்கவும் மாட்டாது.

இனியும் பொறுக்கோம் என உணர்வுடன் எழுந்த தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கியமானதொரு சான்றாதாரமாக திகழ்ந்த யாழ். நூலகம் -

இன்று, பழைய நினைவுகளை மறந்து விடச் சொல்லும் அழுத்தத்துடன், புதிய கட்டடமாக வெளிப்பூச்சு மிளிர்ந்திட நிற்கிறது.

பார்வைக்கு மட்டுமே இது புனரமைக்கப்பட்டு விட்டாலும், இழந்ததை மறந்துவிடமுடியாத உள்மன ஆதங்கத்தை எவராலும் புனரமைத்துவிட முடியவில்லை.

எங்கள் வரலாறு வீறுகொண்டெழுவதற்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்றாக - ஒரு நினைவுச் சின்னமாக எரிந்த நிலையிலேயே பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டிய யாழ். நூலகக் கட்டடம்,

அரசியலும் ஆதாயமும் ஒருங்கு சேர்ந்திட வெண்ணிறக் கட்டடமாய், கருகிய நினைவுகளை மறைத்து எழுந்து நிற்கிறது.

சிதைந்துபோன நூல்களும், அழிந்துபோன சுவடிகளும், நூலகம் எரிந்ததோ எனக் கேள்வியுற்றதும் இதயமே நின்றுபோன தமிழபிமானிகளும் என எல்லாமே மறந்து போக - ஒரு உற்சவம் அங்கு தலையெடுக்க நிமிர்கிறது.

வெண்பூச்சும், பூமரங்களும் மட்டுமே நிலைநிறுத்தப்பட்ட - தமிழரின் ஆன்மாவை அதில் இருத்த முடியாத நிலையில் -திறப்பு விழாவிற்கு நாளும் குறிக்கப்பட்டுவிட்டது.

இனியென்ன கொண்டாட்டம்தான்...! பதவிகள் களையுமுன்பே அரங்கேற்றத்தை நடாத்திவிடத் துடிப்பவர்கள் - அரசியல் நாடகத்தை மேடையேற்றிவிடலாம் என்ற முழக்கமே நூலகமெங்கும் எதிரொலிக்கிறது.

தொலைந்துபோன அறிவுக்களஞ்சியத்தின் ஆன்மாவைத்தான் தேடமுடியவில்லை. தளபாடங்களும், நிர்மாணப் பணிகளுமாவது முடித்துவிடலாம்தானேயென்றால்- அதற்குள் போய்விடுமே அதிகாரமென்று, குறைப் பிரசவமாய் அறிவின் அன்னையவளுக்கு - சத்திரசிகிச்சைக்கும் தீர்மானிக்கப்பட்டாயிற்று.

இனி அழைப்பிதழ்கள் பறக்கும். எரித்தவர்கள் பெயர்கள் மறைய, புனரமைத்தோர் பட்டியலொன்றும், திறந்து வைப்போர் பெருமையென்றும் கட்டளைக் கற்கள் துதிபாடும்.

இதற்குத்தானே ஆசையுற்றோம் என்ற நெஞ்சங்கள் நிறைவுகொள்ளும் - தங்களின் வரலாற்றைத் தாமே மறைக்கிறோம்/மறக்கிறோம் என்ற வலியின் வேதனையில்லாமலேயே .

யாழ். நூலகம் எரிந்த நினைவுகள் மனதை இன்றும் ரம்பமாய் அறுக்கிறதென்றால், புனரமைப்பு என்றும் திறப்பு விழா என்றும் நடக்கும் அரசியல் விளையாட்டுக்களை தமிழ்மக்கள் இன்னமும் வேதனையுடன் நோக்கும் நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர்.

நூலகத்தை மீண்டும் ஒரு களஞ்சியமென நிறுவ வேண்டும் என்ற எதிர்பார்ப்பைவிட, நமது காலத்தில் தான் திறக்கப்பட்டது என்ற குறுகிய அரசியல் நோக்கமே மேலாதிக்கம் செலுத்துவதை அசூசையுடன் மக்கள் பார்க்கின்றனர்.

ஆண்டாண்டு காலமாக அரும்பெரும் சொத்தாக பேணப்படவேண்டிய நூலகத்தை அவசர கதியில் திறப்பதன்மூலம் எதனைச்சாதித்திட இவர்கள் முயற்சிக்கின்றனர்? என மக்களிடம் வலுவாகவே வினாவும் எழுகின்றது...!

யாழ். நூலகம் இன்று நவீன உலகம் எதிர்பார்த்து நிற்கின்ற வசதிகள், வாய்ப்புகள் அனைத்தையும் பூரணமாகப் பெறவேண்டும்.

தனியே நூலகம் மட்டுமல்லாது - தகவல் தொழிநுட்பத்தில் அனைத்து அம்சங்களும் கொண்டதாக அது அமையவேண்டும்.

புதிதாய் நூலகம் உருவாகும் வேளை - அது கொண்டிருக்கும் எமது இனத்தின் வரலாறு அழுத்தமாய்ச் சொல்லப்படவேண்டும்.

உலகெங்கிலுமிருந்தும் - இன்னமும் வீச்சுடன் உதவிகள் கோரப்படவேண்டும்.

யாழ். நூலகத்தால் அறிவு வளர்த்தோர், சிந்தனை ஏற்றம் பெற்றோர் அனைவரும் மனமுவந்து தம் பங்களிப்பைச் செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

இவை அனைத்துடனும் ஒரு முழுமையான செயற்பாட்டுத்திறன்மிக்க நிலையிலேயே நூலகம் திறக்கப்படவேண்டும் என்பதை மக்களின் ஒட்டுமொத்த கருத்தாக உள்ளது.

இந்த உணர்வுகளை, எதிர்பார்ப்பை உதாசீனம் செய்து நூலகத்திறப்பு விழாவை அவசரகதியில் நடத்துவது என்பது - நூலகத்தை கட்டியெழுப்ப வேண்டுமென்ற ஈடுபாடின்றிய வெறும் வைபவமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## யாழ். நூலகத் திறப்புவிழா சச்சரவு தொடர்கிறது

# கட்டட வேலைகளை முடிக்காமல் நூலகத்தைக் கையளிப்பதில் இழுபறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுநூலகத் திறப்புவிழா தொடர்பில் யாழ். மாநகர சபைக்கும், கட்டடத்திணைக்களத்துக்கும் இடையில் இழுபறி நிலை நிலவுவதாகத் தெரியவருகின்றது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது -

யாழ். பொது நூலகத்தை எதிர்வரும் 14ஆம் திகதி திறப்பதற்கான சகல ஏற்பாடுகளும் யாழ்.மாநகரசபையால் முதல்வரின் பணிப்பிற்கமைய மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

வேலைத்தளத்தில் செய்யப்பட்ட தளபாடங்கள் அவசர அவசரமாக ஏற்றப்பட்டு நூலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இவற்றுக்கான தீந்தை பூசும் வேலைகள் இன்னமும் முற்று முழுதாகப் பூர்த்தியடையவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, திருத்த வேலைகளுக்காகக் கட்டடத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட யாழ்.நூலகம் இன்னமும் கட்டடத் திணைக்களத்திடமே உள்ளதாகவும் அறிய வருகின்றது.

கட்டடத் திணைக்களம் தனது வேலைகள் முடிவடைந்த பின்னரே நூலகத்தைத் தாம் ஒப்படைக்கமுடியும் எனவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், வேலைகள் முடிவடையாதநிலையில்- மாநகரசபை நூலகத்தைத் திறக்க முடிவு செய்துள்ளது. மாநகரசபையின் பதவிக்காலம் எதிர்வரும் 17 ஆம் திகதியுடன் முடிவடைவதால், அதற்கு முன்பாக எதிர்வரும் 14 ஆம் திகதி நூலகத்தைத் திறக்க முடிவெடுக்கப்பட்டதாகப் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

மேலும் நூலகத் திறப்புவிழாவில் திரைநீக்கம் செய்யப்படவுள்ள கல்வெட்டில் பல முக்கியஸ்தர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு - கல்வெட்டு தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகின்றது.

## யாழ்.நூலகத் திறப்பு விழாவிற்கு அடுத்த நாள் மேயர் இந்தியாவில்!

### சர்வதேசக் கருத்தரங்கில் பங்குபற்றுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் எதிர்வரும் 14 ஆம் திகதி இந்தியா பயணமாகிறார்.

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தூர் (INDORE) நகரில் நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் மாநகர முதல்வர்களுக்கான சர்வதேசக் கருத்தரங்கில் பங்குபற்றவே அவர் இந்தியா செல்கிறார்.

இக்கருத்தரங்கு எதிர்வரும் 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 14 ஆம் திகதியே யாழ்.நூலக திறப்புவிழா என்பதும் குறிப்பிடத்தக்கது. காலை நூலக திறப்புவிழாவை முடித்துக்கொண்டு, கொழும்பு புறப்படும் முதல்வர் - 14 திகதி இரவே இந்தியா புறப்பட்டு செல்லவுள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## நிலாவெளி அரச கட்டடங்களிலிருந்து கடற்படையினர் வெளியேறுவர்

திருமலை - நிலாவெளிப்பகுதியிலுள்ள அரசாங்க மற்றும் திணைக்கள, கூட்டுத்தாபனக் கட்டடங்களில் இருந்து - கடற்படையினர் விரைவில் வெளியேற இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியிலிருந்து விலகும் படையினர் தமக்கான புதிய கட்டடங்களை அமைக்கும் பணிக்கான அனுமதிக்குக் காத்திருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நிலாவெளியிலுள்ள கடற்படையினர் புதிது புதிதாக முகாம்களை அமைதது வருவது பற்றி விடுதலைப்புலிகள் - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகாரிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## எவரது உயிருக்கும் உடமைக்கும் அச்சுறுத்தலாகச் செயற்படவில்லை!

### ஈ.பி.டி.பி. முன்னாள் எம்.பி.ஜெகன்

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய (ஈ.பி.டி.பி) நாங்கள் எந்தவேளையிலும், எப்போதும், எவரதும் உயிருக்கோ, உடமைக்கோ அச்சுறுத்தலாகச் செயற்பட்டதில்லை - செயற்படப்போவதும் இல்லை.

இவ்வாறு யாழ்.மாவட்ட அமைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - நெடுந்தீவில் ஈ.பி.டி.பிக்கு எதிராக இடம்பெற்ற நிகழ்ச்சிகளின் பின்னணிகள் என்ன? சூத்திரதாரிகள் யார்? என்பன போன்றவை எல்லாம் நன்கு அம்பலமாகியுள்ளநிலையில், பிசுபிசுத்துப்போன முயற்சிகளிலும், அரசியல்லாபம் தேடும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர்.

இது மூத்த அரசியல்வாதிகளின் கௌரவத்திற்கு உவப்பானதும் அல்ல, ஜனநாயகபூர்வமானதும் அல்ல. எந்தவொரு அரசியல் கட்சியையும், எந்தவொரு கிராமத்திலும் செயற்படக்கூடாது எனத் தடைவிதிப்பதை நாகரிக சமூகம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது. இதற்கு நெடுந்தீவில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்த சர்வதேச சக்திகளின் கணிப்பீடுகளும், ஒத்துழைப்புக்களும் தகுந்தசான்று ஆகும்.

அத்துடன் - குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸாரும், நீதிமன்றமும் எடுக்கும் நடவடிக்கைகளில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எதுவித தலையீடுகளையும் மேற்கொள்ளாது என்பதுடன், பிற அரசியல் கட்சிகள் தமது அரசியல் சுயலாப நோக்கில் நீதிமன்ற நடவடிக்கைகளில் அநாவசியத் தலையீடுகள் செய்யக்கூடாது எனவும் ஜெகன் தெரிவித்திருப்பதாக அச்செய்திக் குறிப்பு மேலும் கூறுகிறது.

## யாழ்ப்பாண மாநகர சபையின்

# விசேட ஆணையாளர் பதவிக்கு அலைந்து திரியும் பிரமுகர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் பதவிக்காலம் எதிர்வரும் 17 ஆம் திகதியுடன் முடிவடைவதால், மாநகரசபையின் நிர்வாகம் விசேட ஆணையாளரிடம் கையளிக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதை தொடர்ந்து பலர் இப்பதவியை தாம் அடைந்துவிட வேண்டும் என்ற நோக்கில், பல அரசியல்வாதிகளிடம் அலைந்து திரிவதாகச் செய்திகள் கசியத்தொடங்கியுள்ளன.

இதேவேளை, சில அரசியல்வாதிகள் தம்மிடம் வரும் சிலருக்கு டிமிக்கி கொடுத்துக்கொண்டு இருப்பதாகவும் அறியவருகின்றது.

# மந்திகை ஆஸ்பத்திரிக்கு வசதிகள் கிடைக்கும்வரை எம்பணி தொடரும்

## பிரான்ஸ் மருத்துவர்கள் உறுதி தெரிவிப்பு

(நெல்லியடி)

மந்திகை மருத்துவமனைக்குப் போதியளவு வசதிகள் கிடைக்கும்வரை எமதுபணி தொடரும் என, பிரெஞ்சு மருத்துவக் குழுவினர் தெரிவித்தனர். எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலைத் தொடர்ந்து மக்கள் பலரும் எமது பணி வெகுவிரைவில் முடிவடைந்து விடும் என எம்முடன் தொடர்புகொண்டு கேட்ட வண்ணம் உள்ளனர்.

எமது அமைப்புப் போர்களில் சிக்கித்தவிக்கும் மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதனை மையமாகக்கொண்டு, உலகின் பல்வேறு இடங்களிலும் செயற்படுகின்றது.

இவ்வாறான இடங்களில் சமாதானச் சூழல் உருவானதைத் தொடர்ந்து நாம் வெளியேறி விடுவோம்.

ஆனால், மந்திகை மருத்துவமனையில் இன்று அடிப்படை வசதிகள் தானும் இல்லாதநிலையே உள்ளது. சத்திர சிகிச்சைப் பிரிவு எமது பொறுப்பிலேயே இயங்கிக்கொண்டிருக்கிறது.

அரசு இந்த மருத்துவமனைக்குத் தேவையான வசதிகளையும், வைத்தியர்களையும் அனுப்பிவைத்து எமது சேவை தேவையற்றது என்றநிலை வரும்பொழுது நாமாகவே எமது பணியை நிறைவுசெய்து கொள்வோம் என்றார்.

# மனித உரிமைகள் இணக்கப்பாடு பேர்ளினில் சாத்தியமாக்க முயற்சி!

(பேர்ளின்)

பேர்ளினில் நாளை ஆரம்பமாகவுள்ள அரசாங்க - விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் மனித உரிமைகள் தொடர்பான இணக்கப்பாடொன்றை எட்டுவதற்குச் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் முயன்று வருவதாகக் கூறப்படுகின்றது.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான 'அம்னெஸ்ரி இன்ரநெஷனல்' இன் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டின் இப்பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ளதால் - இது தொடர்பான இணக்கப்பாடு ஏற்படும் சாத்தியம் அதிகமென்றும் - சர்வதேச மனித உரிமை அமைப்பு வட்டாரங்கள் ஜெனிவாவில் தெரிவித்தன.

மனித உரிமைகள் சம்பந்தமான இணக்கப்பாடொன்று எட்டப்படுமாயின், அதனைக் கண்காணிப்பதற்கு - வெளிநாட்டு, உள்நாட்டு மனித உரிமை ஆர்வலர்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட வாய்ப்புள்ளதாகவும் இவ்வாட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# புன்னாலைக் கட்டுவன் சந்தியில் அரசமரத்தடியில் புத்தர் படம்

## படையினரின் செயலால் மக்கள் குழப்பம்

(ஊரெழு)

வடக்குப் புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அருகாமையில் உள்ள அரச மரத்திற்குக் கீழ் புத்தரின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு சிறிய வழிபாட்டுத்தலம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

படையினரால் உருவாக்கப்பட்ட மேற்படி ஆலயம் தொடர்பாக பொது மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. (96)

# ஜே.வி.பியுடன் இணைந்தால் எமக்கு வெற்றி நிச்சயம்!

## அநுரா பண்டாரநாயக்க நம்பிக்கை

(கொழும்பு)

கடந்த முறையே நாம் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்திருந்தால், பல நாடாளுமன்ற இடங்களை மேலதிகமாகப் பெற்றிருப்போம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரரும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசும்போது,

இனிமேல் ஜே.வி.பியுடன் இணைந்து போட்டியிட்டு வெற்றிகளைச் சம்பாதிக்கவே நாம் விரும்புகின்றோம்.

இதன்மூலம் இனிவரும் தேர்தல் எதுவென்றாலும் நாமே பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றக் கூடியதாக இருக்கும் என்றார்.

### நெடுந்தீவு ப.நோ.கூ.ச. புதிய தலைவர் தெரிவு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பல.நோ.கூ. சங்கத்தின் புதிய தலைவராகப் போட்டியின் மத்தியில் மூன்று வாக்குகள் வித்தியாசத்தில் சு.கோபாலசிங்கம் தெரிவானார். (113)



நியூசிலாந்து மேர்ஸி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வி.நித்தியானந்தம் - யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறைக்கு அதிதிப் புலமையாளராக வருகைதந்துள்ளார். நேற்று அவர் பல்கலைக்கழக துணைவேந்தரிடமிருந்து பதவியேற்புக் கடிதத்தைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.



பருத்தித்துறை செயலகத் தையற் பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி உரையாற்றுவதனையும், வலது பக்கத்தில் முறையே முதலாவதாக தையற்பயிற்சி நிலைய ஆசிரியை, அப்பிரதேச கிராம அலுவலர், இடதுபக்கத்திலிருந்து முறையே பண்பாட்டுக் கலைஞர் ரதிதரன், வடமராட்சி மகளிர் அணிப் பொறுப்பாளர் ரூபா, கிராம அலுவலர் குமரகுரபன், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா மற்றும் விவசாய சங்கத் தலைவர் பரஞ்சோதி ஆகியோர் காணப்படுகின்றனர்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## கைகலப்பில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கஸ்தூரியார் வீதியிலுள்ள தங்குமிடம் ஒன்றில் ஏற்பட்ட கைகலப்பில் - மட்டக்களப்புவாசி ஒருவர் தலையில் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில், சு.சிவகுமார் (வயது 26) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (60)

## ஒரு லட்சம் மரங்கள் நடுவதற்குத் திட்டம்

(ஊரெழு)

இவ்வருடம் ஒரு லட்சம் பயன்தரு மரங்களை நடுவதற்குச் சுற்றாடல் வனவளத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கடந்தகால யுத்த நடவடிக்கையால் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பெருமளவான பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதனை ஈடுசெய்யும் வகையில் மீள் மரநடுகைத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (96)

## நீண்டகாலமாக புனரமைக்கப்படாத அராலி வீதி

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கையும் - கிழக்கையும் இணைக்கும் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாதுள்ளதால், அந்த வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைப்பு செய்து, மக்கள் எந்தவித இடையூறுகளுமின்றிப் போக்குவரத்துச் செய்ய உதவுமாறு அந்தப்பகுதி பொது அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தும், இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (18)

## சமூக சேவை உத்தியோகத்தர் இடமாற்றம்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சமூகசேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய வி.கே.முருகையா - சங்கானைப் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

ஈச்சிலம்பத்தைப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய கே.சண்முகலிங்கம் நெடுந்தீவு, நல்லூர் ஆகிய பிரதேச செயலக அலுவலகங்களில் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ளார். (113,ச)

## பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் கட்டடம் பூர்த்தியாகும்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்குச் சென்றவருடம் நிறுவப்பட்ட மாடிக்கட்டடம் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்குச் சர்வதேச ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது.

'நான்' அமைப்பின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கடந்த வருடம் நிர்மாணிக்கப்பட்ட இந்த மாடிக்கட்டடம்-பூர்த்தியடையாத நிலையிலிருந்து வந்தது.

கல்லூரி நிர்வாகம் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்தக் கட்டடத்தைப் பூர்த்தியாக்கிக் கொடுப்பதற்கு இந்நிறுவனம் முன்வந்துள்ளது. (43)

# எங்கே போகிறோம்...?

நேசன்

## படைப்புக்களில் மொழிநடைத்தரம்

ஒரு இலக்கியப் படைப்பு மிகச் சிறந்தது எனக் கணிக்கப்படுவதற்குத் துணையாகும் காரணிகள் சில உண்டு. அதன் வடிவம், வெளிப்படுத்தப்படும் முறை, அதன் மொழி நடை என அவை விரியும். உலகத்தரம்மிக்க ஆக்கங்கள் என அடையாளம் காணப்பட்ட படைப்புக்களில் இத்தகைய சிறப்புக்கள் பலவோ அல்லது இவற்றில் சிலவோ காணப்படுவதை அவதானிக்கலாம்.

உருவாகின்ற படைப்புகள் அனைத்தும் அத்தகைய உயர் தரத்தினவாக அமைய வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் வெளிவரும் படைப்புகள் சராசரியாக ஒரு திருப்திகரமான மட்டத்தையாவது எட்ட வேண்டாமா?

எழுதுகிறவர்களுக்கு அப்படியான ஒரு ஆவல்தானும் இல்லாது போவது எவ்வளவு பெரிய நஷ்டம்? இதில் மிகப் பெரிய சோதனையாக அமைந்து விடுவது எதுவெனில் இத்தகைய படைப்புகளில் காணப்படும் மொழி நடையின் தரம்தான். இன்றெல்லாம் எழுதுகிற பலரிடம் சரளமான பாஷை வளம் மிக மிகக் குறைந்தே காணப்படுகிறது.

எழுத வேண்டும் என்கிற ஆர்வம் இருக்கிறது. ஒரு மையப் பொருளைச் சுற்றி ஒரு கதையைப் பின்னி விடுகிற திறமையும் இருக்கிறது. ஆனால் வெளிப்படுத்தல் என்ற மட்டத்துக்கு போகும்போது கையாளும் மொழிநடை இன்னமும் முதிர்ச்சி வேண்டப்படும் ஒரு நிலையில்தான் காணப்படுகிறது.

இதற்குக் காரணங்கள் எவையென நாம் காணப்புறப்படுகையில், முதலாவது காரணியாகத் தெரிவது இந்த எழுத்தாளர்களிடம் போதிய அளவு மொழிப் பரிச்சயம் - பல தரப்பட்டதான நடையை, உத்தியைக் கண்டு அறிந்திராத வள வறுமையாகும். எழுதப் புறப்படுகிறவர்கள் முதலில் நிறைய வாசிக்க வேண்டும். பலவகையான தன்மையிலமைந்த படைப்புகளை வாசித்து உள்வாங்கிக் கொள்ளும் பக்குவம் வரவேண்டும்.

இன்னார் என்பதல்ல. முதலில் பரவலாக வாசித்து எழுத்துக்களின் தன்மையை அறிந்து கொள்ளும் ஆர்வம் இருக்கவேண்டும். ஒரு மட்டத்துக்குப் பிறகு தனக்கான தெரிவுகளை மேற்கொண்டு - குறிப்பிட்ட சிலரை வாசித்து அவர்களின் தனச்சிறப்புகளை அவதானித்து உள்வாங்கிக் கொள்ள வேண்டும். பாரதிக்குப் பின் தமிழ் உரை நடை என்ற பெயரில் வல்லிக் கண்ணன், முன்னர் வெளி வந்த 'தீபம்' சஞ்சிகையில் ஒரு கட்டுரைத் தொடரை எழுதி வந்தார் (எண்பதுகளின் ஆரம்பக் கட்டத்தில்). அதில் அவர் ஒவ்வொரு கவனிப்புக்குரிய படைப்பாளரையும் ஆழ நோக்கி அவர்களின் எழுத்தின் தனித் தன்மையை எடுத்துச் சொல்லி வந்தார். கல்கி, மு.வ, நா.பா, அகிலன், சாண்டில்யன் என எழுதி வந்த அவர் சுஜாதா, புஷ்பா தங்கதுரை போன்றோரிடம் கூட இருந்த உரைநடைத் தனித்துவங்களை எடுத்துக் காட்டி எழுதினார் - ஈழத்து எழுத்தாளர்கள் பலரைப் பற்றியும் அவரது கட்டுரை பேசியதன் அவசியத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

பெருமைக்குரிய அந்தத் தனித்துவம் இப்போது தொலைந்து போயிற்றா? என்று கவலை ஏற்படுகிறது.

நீண்ட காலமாக எமது பார்வைக்குக் கிடைத்து வருகிற படைப்புகள் பலவற்றில் நாம் அவதானிக்கக் கூடியதாயுள்ள குறைபாடு, அவற்றின் மொழிநடைத் தரம்தான். வாசிப்பவர்களை ஈர்த்து தன் வசம் கொள்ளக்கூடியதான ஒரு அழகிய மொழிநடை தம் கைவசம் வர வேண்டுமென எவரும் விரும்பி முயல்வதாகத் தெரியவில்லை. எப்படியாவது எழுதி விடுவதே சாதனை என நினைக்கிறார்கள்.

"எடுத்துச் சொல்லத்தக்க தனித்துவம்" இருப்பது ஒரு புறம் இருக்க நெடுங்காலம் எழுதி வருகிற ஒரு சில படைப்பாளிகள் தமது உரைநடைப் போக்குப் பற்றி சிறிதும் கவலை கொள்ளாது, கவனம் எடுக்காது வெகு அலட்சியமாய் ஏதோ எழுதித் தள்ளிவிட்டு, ஒரு 'முட்டு' இறங்கிவிட்ட ஆசுவாசத்தோடு இருந்து விடப் பார்ப்பது எவ்வளவு துரதிஷ்டம். இந்த இடத்தில் 'ஒரு படைப்பு என்பது பிரசவமாகாது...' எத்தனையோ தடவை அது திருத்தி - திருப்பி அமைக்கப்படமுடியும் எனக் குறிப்பிடும் நமது மண்ணின் நாடகத்துறைக் கலைஞர் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் ஞாபகம் வருவதைத் தவிர்க்க முடியவில்லை. அயராத உழைப்பின் அடையாளமாகத் தனக்கென ஒரு மொழியை வைத்துக் கொண்டுள்ள அத்தகைய கலைஞர்களை நமது இளைய படைப்பாளிகள் படித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

சிறுகதையிலோ, நாவலிலோ, கட்டுரையிலோ, நாடகப் பிரதியிலோ எதிலும் ஒருவர் தனக்கென ஒரு தனித்துவத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும். ஒரு படைப்பைப் படித்த மாத்திரத்தே இது சுந்தரராமசாமியினுடையது, இது லா.ச.ராமாமிர்தத்தினுடையது, இது ஜெயகாந்தன், இது ஜானகிராமன்,இது அம்பை என்று அடையாளம் காண முடிவது எப்படி?

இவர்களெல்லாம் ஓயாது முனைந்து அப்படியான முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர்கள - எழுதும்போது முழுமையான பிரக்ஞையுடன், பொறுப்புடன், அக்கறையுடன் எழுதியவர்கள்.

இன்று பரவலாக நாம் படிக்கின்ற சஞ்சிகைகள் பத்திரிகைகளில் தனித்துவம் பதிகிறதோ இல்லையோ - தவறுகளாவது இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளலாமல்லவா?

'நாட்டைக் கட்டி எழுப்ப முன்வருமாறு பிரதமர் இளைஞர்களுக்கு அறைகூவல்' என்று தலைப்பு வருகிறது - அறைகூவல் என்றால் (அறையிலிருந்து கொண்டு கூவுதல், அறை வாங்கிக் கொண்டு கூவுதல், போருக்கு அழைத்தல்...) என்று ஒரு பல்தேர்வு வினா க.பொ.த. (சா.த) வினாத்தாளில் வந்ததாக ஞாபகம். அறை கூவல் என்றால் போருக்கழைத்தல் என்றுதான் பொருள் என நம்புகிறேன்.

- இரத்தங்கள்... என்று ஒரு சொற்பிரயோகம் - திரவப் பொருளுக்குப் பன்மை வடிவம் கிடையாது எனப்படித்த ஞாபகம். தண்ணீர்கள் என்று யாராவது சொல்வதுண்டா? -ஆனால் இன்று இத்தகைய தவறான பிரயோகம் கூட பிரசுரமாக நேரிடுவது துக்கமல்லவா?


பத்திரிகைகளுக்குத் தமது படைப்புக்களை அனுப்பும் எமது இளைய படைப்பாளர்கள் தமது வாசிப்பை - தேடலை மேலும் விரிவாக்கிக்கொண்டு மொழிச் செழுமைமிக்க ஆக்கங்களைத் தருவதற்கு முன்வரவேண்டும். சிறிது இறுக்கமாகப் பழகிப் போன சொற்பிரயோகத்தைக் கூடியவரை தவிர்த்து எழுதுவதைப் படித்து விட்டு - "ஒண்டும் விளங்கேல்ல..." என்று சொல்லும் குழந்தைத்தனத்திலிருந்து அவர்கள் விடுபட வேண்டும். "மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்று சொன்னவனின் இதயத் துடிப்பை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

*மீண்டும் சந்திப்போம்...*



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003



## கார்ல் லெவ்லின் ஹூப்பர்
(அணித்தலைவர்)

*பிறந்தது* - 15.12.1966 ஜோர்ஜ்ரவுன் (கயானா)
*அணிகள்* - கயானா, மே. இ தீவுகள், கெண்ட் (இங்)
வலதுகைத் துடுப்பாட்டவீரர்.
வலதுகை OFF BREAK.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா 87/88 பம்பாய்.
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 86/87 டனேடின்.

ஓய்வு பெற்று அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தபோது மே.இ.அணியினைக் கட்டி எழுப்புவதற்காக அணித்தலைமையையும் பாரிய பொறுப்பும் சுமத்தப்பட்டவர். இன்று அதனை ஓரளவில் நிறைவேற்றிக் கொண்டிருப்பது சிறப்பு. நல்லதொரு சகலதுறை வீரர். ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில்- 5633 ஓட்டங்கள், 7 சதங்கள், 29 அரைச்சதங்கள், 190 விக்கெட்டுக்கள் பெற்றவர். உலகக்கிண்ணப்போட்டிகளின் மே.இ அணியின் ஒவ்வொரு நகர்விலும் இவரது சுவடு இருக்கும்.

## ரிட்லி டேட்டாமோர் ஜேக்கப்பஸ்



*பிறந்தது* - 26.11.1967 அன்ரீகுவா (கரிபியன்)
*அணிகள்* - லீவட் அய்லண்ட்ஸ், மே.இ.தீ.
இடதுகைத்துடுப்பாட்டவீரர்.
விக்கெட் காப்பாளர்.
*டெஸ்ட்அறிமுகம்* - எதிர் தென்ஆபிரிக்கா 98/99
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 95/96

ஜெப்ரி டுஜோனின் பின் பலர் வந்தும், நிரந்தர இடம் பிடித்த விக்கெட்காப்பாளர். இவர் தனது 30 களில்தான் சர்வதேச நிலையில் விளையாட முடிந்தது. நம்பிக்கையான துடுப்பாட்ட வீரருமகூட. ஒருநாள் போட்டிகள்- 116, ஓட்டங்கள் 1645, பிடிகள் 133. வளர்ந்து வரும் இவர் மே.இந்திய அணியில் பெரும் பொறுப்பு ஏற்க வேண்டும்.



## சிவ்நாராயண் சந்தர்போல்

*பிறந்தது* - 18.08.1974, கயானா
*அணிகள்* - கயானா, மே.இ.தீவுகள்.
இடதுகைத் துடுப்பாட்டவீரர்.
LEG BREAK.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இங்கிலாந்து 93/94
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இந்தியா 94/95 பரீதாபாத் (இந்தியா)

பூரணமான துடுப்பாட்ட வீரர். அதியுயர் திறமை. அணிக்கு இன்றியமையாதவர், இருவகை ஆட்டங்களிலும் கௌரவமான சராசரியைக் கொண்டிருப்பவர். 14 அரைச்சதம் கண்ட பின்பே ஒருசதம் கண்டவர். இவருக்கும் காயங்கள் தொடர்பான பிரச்சினைகளும் உண்டு. ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 126, ஓட்டங்கள் 3717, சதங்கள் 3, அரைச் சதங்கள் 23.

## பெட்ரோ ரிரோன் கொலினஸ்



*பிறந்தது* - 12.08.1976. பார்படோஸ்.
*அணிகள்* - பார்படோஸ், மே.இ.தீவுகள்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
இடதுகை Fast Medium.
*டெஸ்ட் அறிமுகம்*:- எதிர் அவுஸ்திரேலியா 98/99
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 99/2000

மிதவேகப் பந்து வீச்சாளர்கள் வரிசையில் முதன்மைபெற முயற்சிப்பவர். பந்தை தன்னிஷ்டப்படி செயற்படவைக்கும் ஆற்றல் மிக்கவர். நம்பகமான Night Wathchman. இவர் மேல்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களை திருப்பி அனுப்புவதில் சமர்த்தர். சர்வதேச அணியில் இடைக்கிடை காணாமற் போனாலும், தன் திறமையால் மீண்டும் அணிக்குள் வந்திருப்பவர்.
ஒருநாள் சர்வதேச ஆட்டம்- 20, விக்கெட் 28, திறமை 3/18.



## கோரி டலனேலோ கொலிமோர்

*பிறந்தது* - 21.12.1977 பார்படோஸ்
*அணிகள்* - பார்படோஸ். மே.இ.தீ.
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை வேகப்பந்து வீச்சாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் அவுஸ்திரேலியா 98/99
ஒரு நாள் அறிமுகம்- எதிர் இந்தியா 99/2000

சிறந்த ஒருநாள் பந்து வீச்சாளராக வளர்ந்து வருபவர். உபாதைகளால் சிறிது தடை. ஒரே ஒரு டெஸ்ட் விளையாடி ஒரு விக்கெட் பெற்றவர். இன்னும் எதிர்காலச் சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. திறமையான பந்து வீச்சு 5/51.

### நாளும் ஒரு வினா

உலகக்கிண்ணத் தொடர் ஒன்றில் மூன்று சதங்கள் போட்ட வீரர் யார்?

மார்க் வோ (1996)



## மேர்வின் டிலோன்

*பிறந்தது* - 05.06.1974 டிரினிடாட்.
*அணிகள்* - டிரினிடாட் அன்ட் டுபாகோ, மே.இ.தீவுகள்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை வேகப்பந்து வீச்சு.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா 96/97
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் தென்னாபிரிக்கா 97/98

கொட்ணி வோல்சுடன் ஒப்பிடத்தக்கவர். கரிபியன் முதன்மை வேகப் பந்துவீச்சாளர். சிறந்த களத் தடுப்பாளரும் கூட. இவரது பந்துவீச்சு முறைமைகளுக்குக் கட்டுப்படாமையால் தொடர்ந்து 15 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவில்லை. சந்தர்ப்பம் மீண்டும் வந்தபோது அதனைத் தக்க வைத்துக்கொண்டார். தற்போது பந்து வீச்சினை நிதானத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் கொண்டு வந்துள்ளார். 74 ஒருநாள் போட்டிகளில் 99 விக்கெட் பெற்றவர், திறமை 5/51.

## வெஸ்பர்ட் கோனியல் டிரேக்ஸ்



*பிறந்தது* - 05.08.1969 பார்படோஸ்.
*அணிகள்*- பார்படோஸ் மே.இ.தீவுகள் .- சசெக்ஸ்(இங்.) நோட்டிங்ஹம்சயர் (இங்.) வோர்க்ஷயர்(இங்.)
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை வேகப்பந்து வீச்சு.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பங்களாதேஷ் 2002/03
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் அவுஸ்திரேலியா 94/95

இவரது திறமையில் நம்பிக்கை வைத்து உலகக் கிண்ணப் போட்டிகளுக்கும் தெரிவு செய்துள்ளார்கள். 95 ல் ஒருநாள் போட்டிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டவர். கமரூன் கபியின் இயலாமை இவரை உலகக் கிண்ணம் வரையில் கொண்டுவந்து விட்டது.

## கிறிஸ்தோபர் ஹென்ரி கைல்

*பிறந்தது* - 21.09.1979, ஜமெய்க்கா
*அணிகள்* - ஜமெய்க்கா, மே.இ.தீவுகள்.
இடதுகைத் துடுப்பாட்டம்.






வலதுகை Off Break.
*டெஸ்ட் அறிமுகம்*:- எதிர் சிம்பாப்பே 99/2000
*ஒருநாள்அறிமுகம்* - எதிர் இந்தியா. 99

சிறந்தொரு ஆரம்பத் துடுப்பாட்டவீரரின் இடத்தை மே.இ.தீவுகள் அணிக்கு நிரப்பும் ஆற்றல் துடுப்பாட்ட நுணுக்கங்கள் அனைத்தையும் அறிந்தவர். அவற்றை மெதுமெதுவாக நடைமுறைப்படுத்த முனைபவர். பிராந்தியக் கிரிக்கெட் போட்டிகளில் சிறப்பாகச் செய்தமை இவரை நம்பிக்கையுடன் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கும் கொண்டு வந்துள்ளது. இவருக்கும் பெரும் பொறுப்பு உண்டு. ஒரு நாள் சர்வதேச ஆட்டங்கள்- 62, 2150 ரன்கள், 4 சதங்கள், 14 அரைச்சதங்கள்.

## ரயான் ஓ நீல் ஹிண்ட்ஸ்



*பிறந்தது* - 17.02.1981. பார்படோஸ்
*அணிகள்* - பார்படோஸ், மே.இ.அணி.
இடதுகைத் துடுப்பாட்டம்.
மெதுவான இடதுகை ORTHODOX.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 2000/02
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் சிம்பாப்பே 2000/02

4 டெஸ்ட், 11 சர்வதேச ஒருநாள் போட்டி ஆனுபவம் மட்டும் கொண்டவர். சகலதுறை ஆட்டக்காரர். இவர் மிக இளவயதில் இனங்காணப்பட்டமை இவரது அதிர்ஷ்டம். மேலும் மார்லன் சாமுவெல்ஸ் காயம்பட்டது இன்னொரு அதிர்ஷ்டம். இளைஞர் கிரிக்கெட் போட்டியில் மே.இந்தியத் தீவுகள் அணித் தலைவராக இருந்தவர்.



## வேவல் வெய்ன் ஹிண்ட்ஸ்

*பிறந்தது* - 7.9.1976 ஜமெய்க்கா(கரிபியன்)
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் சிம்பாப்வே 99/2000
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இந்தியா 99/00 சிங்கப்பூர்

மிகத் திறமையான ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். இன்னும் நிதானம் அவசியம். பந்தைக் கடுமையாகத் தண்டிப்பவர். பிராந்தியப் போட்டிகளில் அரைச் சதங்கள் நிறையவே அடித்துள்ளார். இவரின் அலட்சிய விளையாட்டு தேசிய அணியில் நுழைவதைத் தாமதப்படுத்தியது. இளம்வீரர் என்ற வகையில் இவரிடம் இருந்து மேற்கிந்திய அணி நிறையவே எதிர்பார்க்கிறது. ஒருநாள் ஆட்டங்கள் - 64, ரன்கள் 1558, 1 சதம் , அரைச்சதம் 10.

## பிறைன் சார்ள்ஸ் லாறா



*பிறந்தது* - 02.05.1969 ட்ரினிடாட்
*அணிகள்* - ட்ரினிடாட் டுபாகோ மே.இ.தீவுகள் வோர்விக்ஷயர்(இங்), நொதர்ண் ரிரான்ஸ்வால் (தெ.ஆ)
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.
LEG BREAK GOOGLY.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 90/91
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 90/91

2002 வரை 15 சதங்கள், 48 அரைச்சதங்கள், 7549 ரன்கள், ஒரு நாள் சாதனை. டெஸ்ட்டில்- 18 சதங்கள், 37 அரைச் சதங்கள், 7572 ஓட்டங்கள். உலகின் எந்த அணிக்குள்ளும் அனுமதியின்றி நுழையும் ஆற்றல். உலகின் அதிசிறந்த வீரன். உலகசாதனை டெஸ்ட்டில் 375. முதற்தர ஆட்டத்தில் 501 (ஒரு ஆட்டத்தில்). இவரது சாதனை வரிசை மிகப்பெரியது. உலகின் முதற்தர வீரர் இவரா அல்லது சச்சின் டெண்டுல்கரா என்பது இன்னும் முடிவாகவில்லை. சிறிது இடைவெளியின் பின்னர் தென்ஆபிரிக்கா செல்கிறார். பாரிய பொறுப்பு இவருக்குண்டு.




## ஜேர்மைன் ஜேய் சார்ள்ஸ் லோசன்

*பிறந்தது* - 13.01.1982 ஜமெய்க்கா(கரிபியன்)
*அணிகள்* - ஜமெய்க்கா, மே.இ.தீவுகள்
வலதுகைத் துடுப்பாட்டம்.
வலதுகை மிதவேகப் பந்துவீச்சு.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் இந்தியா 2002/03
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் இலங்கை 2001/03

இளம் வீரர் படையில் இவரும் ஒருவர். 2002இல் இந்தியாவைக் கலக்கியவர் ஒருநாள் போட்டிகளில். நான்கு டெஸ்ட்டுகள், 15 விக்கெட்டுக்கள். இன்னொரு அன்டி றொபட்ஸ் என்று வர்ணிக்கபபடுபவர். உலகக் கிண்ணப் போட்டிகளில் இவரது பங்களிப்பும் பெரிதாகவே இருக்கப்போகின்றது.

## நிக்லஸ் அலெக்ஸி மக்னமாரா மக்லீன்

*பிறந்தது* - 20.07.1973 சென்ட் வின்சன்ட் தீவு(கரிபியன்)
*அணிகள்* - வின்வர்ட் அயலண்ட்ஸ், மே.இ, ஹம்ப்ஷயர்(இங்.), குவாசூலு, நேட்டால்.



19 டெஸ்ட் போட்டிகள், 44 ஒருநாள் சர்வதேசப்போட்டிகளில் ஆடிய இவர் சில காலம் காயம் காரணமாக விளையாடவில்லை. இரண்டு வகைப் போட்டிகளிலும் 80 விக்கெட்டுக்கள் பெற்றவர். சிறந்தொரு வேகப்பந்து வீச்சாளராக வரக்கூடியவர். தெரிவாளர்கள் இவர் மீது கொண்ட நம்பிக்கையை உலகக் கிண்ணப் போட்டிகளில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இவருக்குண்டு.



## றிக்காடோ லொயிட் பவல்

*பிறந்தது* - 16.12.1978 ஜமெய்க்கா
*அணிகள்* - ஜமெய்க்கா, மே.இ.தீவுகள்
வலதுகைத் துடுப்பாட்டம்
வலதுகை OFF BREAK.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் நியூசிலாந்து 99/2000
*ஒருநாள் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 99/2000

ஒருநாள் ஆட்டம்- 58, 1248 ரன், கூடிய தொகை 124, ஒரு சதம், 5 அரைச்சதம். மே.இந்திய அணியின் இளம் வீரர்களில் ஒருவர். உலகக்கிண்ணப் போட்டிகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படுவதில் இவருக்கும் பங்கிருக்கும். மிகச் சிறந்த களத்தடுப்பாளர்.

## ராம்நரேஷ் றொணி சர்வான்



*பிறந்தது* - 23.06.1980 கயானா
*அணிகள்* - கயானா மே.இ.தீவுகள்
வலதுகைத் துடுப்பாட்டம்
LEG BREAK.
*டெஸ்ட் அறிமுகம்* - எதிர் பாகிஸ்தான் 99/2000
*ஒருநாள் அறிமுகம* - எதிர் இங்கிலாந்து 2000

சர்வான் என்றால், அண்மையில் இந்தியாவில் நடந்து முடிந்த ஒருநாள் போட்டிகள் உடனே நினைவுக்குவரும். மேற்கிந்திய முதல் தரப் போட்டிகளில் பல ஏற்ற இறக்கங்களைக் கண்டவர். ஒரு முதற்தர ஆட்டத்தில் திடீரென வீறுகொண்டு அடித்த இரண்டு சதங்கள் மே.இ.அணிக்கு பாதை திறந்தன.

முதலாவது டெஸ்டில் 84 ஓட்டங்கள். இலங்கை வந்த மேற்கிந்தியதீவுகள் அணி சிறப்பாகச் செய்யவில்லை. ஆனால், சர்வான் சிறப்பாகச் செய்தார். கிரிக்கெட் ரசிகர் உலகக் கிண்ணம் 2003 இல் ஆவலாக எதிர்பார்க்கும் ஒருவர் சர்வான். டெஸ்ட் போட்டிகளில் ஒரு சதம், 14 அரைச்சதங்கள், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 1 சதம், 5 அரைச்சதங்கள். இந்த உலகக்கிண்ணப்போட்டிகளில் நிச்சயம் பிரகாசிப்பார் என்று எதிர்பார்க்கப்படும் ஒரு வீரர்.

மேற்கிந்திய அணியின் வெற்றிகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பாரா? என்பது இன்னும் சில நாட்களில் தெரிந்து விடும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## உயர்பாதுகாப்பு வலயம் இயல்பு வாழ்வை சீரழிக்கிறது

# மனிதாபிமானத்தோடு அணுகுங்கள்; நம்பியாரிடம் கேட்ட பொது அமைப்புக்கள்!

(நமது நிருபர்)

உயர்பாதுகாப்பு வலய விவகாரம் மக்களின் வாழ்வை சீரழிக்கின்றது. இயல்பு வாழ்வு எமக்கு எட்டாது தொலைவிலிருக்கின்றது. எங்கள் பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடு பாருங்கள். எம்மை எமது மண்ணில் மீளக்குடியமர வழிவிடுங்கள் என - யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ். செயலகத்தில் நடந்த சந்திப்பில், ஓய்வுபெற்ற இந்திய இராணுவத்தின் உயரதிகாரி சதீஸ் நம்பியாரிடம் கேட்டுக் கொண்டனர்.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் பரமநாதன் -

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் வரலாற்று, கலாசார, ஆன்மீக முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

இன்று கைவிடப்பட்ட நிலையில் முற்புதர்கள் மண்டிய நிலையில், வலிகாமம் வடக்கு காணப்படுகின்றது. மக்களின் வளம்மிக்க குடியிருப்புப் பிரதேசத்தை ஏதோ காட்டுப் பிரதேசம் போல சித்தரிக்கும் நிலைமையை ஏற்படுத்தும் எத்தனிப்பே இது.

உண்மையில் வலிகாமம் வடக்கு முழுவதும் செறிந்த குடியிருப்புப் பிரதேசமாகவும், பயிர்செய் நிலமாகவும் இருந்தது.

காங்கேசன்துறை ஒரு நகரமாக இருந்தது. வரலாற்றுப் பெருமைமிக்க மாவட்டபுரம் போன்ற இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் என்பன அங்கே உண்டு.

அங்கு வாழ்ந்த ஏறத்தாழ பத்தாயிரம் குடும்பங்கள் தற்போது அகதி முகாம்களில் வாழ்கின்றன. உண்மையில், புரிந்துணர்வு உடன்படிக்கை உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்த இந்த மக்களுக்கு எந்தவித பலன்களையும் தரவில்லை.

வலிகாமம் வடக்குப்பிரதேசத்தில் தொழில் ரீதியாக 40% மக்கள் விவசாயிகளாகவும், 30% மக்கள் கடற்தொழிளாளர்களாகவும் வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் தொழிலிழந்து, பொருளாதாரமிழந்து அல்லல்படுகின்றனர். என்றார்.

அடுத்து, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபரும், மனித முன்னேற்ற நடுநிலையட் பிரதிநிதியுமான அருட்திரு பேணாட அடிகளார்,

தென்பகுதி மக்கள் குண்டுவெடிப்புக்கள், தாக்குதல்கள் அற்ற, சோதனைச்சாவடிகள், நெருக்கீடுகள் அற்ற வாழ்க்கையை கடந்த ஒருவருடமாக வாழ்கின்றனர். இலங்கை அரசாங்கப்படைகள் ஓய்வாக கஷ்டமின்றி உள்ளனர். ஆனால், இடம் பெயர்ந்து, இருப்பிழந்து அல்லற்படும் எமது மக்களின் கதை துயர் தோய்ந்தபடியேதான் உள்ளது. யாழ்ப்பாணம் தொடர்ந்தும் உயர்பாதுகாப்பு வலயங்கள், ராணுவமுகாம்கள் என்பனவற்றோடு ஒரு பாதுகாப்பு வலைப்பின்னலாகவே (Military Net Work) உள்ளது.

யாழ் நகரை அண்டிய குருநகர் பிரதேசத்தில் ஒரு வீட்டில் 5 அல்லது 6 குடும்பங்கள் வாழ்கின்றனர். மிகமிகச் சிறிய வீடுகளில் அடிப்படை வசதிகள் இன்றிய வாழ்க்கையிது. வன்னியிலிருந்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் திரும்பிவருகின்றனர். இன்னும் இக்குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப அனுமதிக்கப்படவில்லை. சாவகச்சேரி பிரதேசங்களுக்கு திரும்பும் குடும்பங்களுக்கும் இதே நிலைதான். இந்நிலையில் ஒரு இராணுவமயப்பட்ட நிலை (Militarized Situation) யாழ்ப்பாணத்தில் நிலவுவது மக்கள் மத்தியில் அரசாங்கத்தினதும், அதன் படைகளினதும் நோக்கத்தையிட்டு சந்தேகத்தை உருவாக்குவதாகவுள்ளது என்றார்.

தென்மராட்சி மக்கள் நலன்பேணும் அமைப்பின் சார்பில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி உப அதிபர் அருந்தவபாலன் பேசினார்.

உயர்பாதுகாப்பு வலயங்களால் தென்மராட்சியில் நெல்விளையும் நிலங்கள், தென்னந்தோட்டங்கள் கைவிடப்பட்டு சீரழிவதை அவர் சுட்டிக்காட்டி, ஜெனரல் நம்பியார் மனிதாபிமான விடயமாக அணுகி ஆலோசனைத்திட்டங்களை முன்வைக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பிரதேச மக்களின் சார்பில் அப்பிரதேசத்தின் பிரதிநிதி பத்மநாதன் கருத்துக்களை முன்வைத்தார்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு உயர்பாதுகாப்பு வலய முன்னரங்குகளால் இரண்டாகத் துண்டாடப்படுவதனால் மக்கள் தமது நிர்வாக விடயங்களையும், மருத்துவ விடயங்களையும் கவனிப்பதற்காக நீண்ட தூரம் - 23 கிலே மீற்றர் தூரம் அலைய வேண்டியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். மக்களின் பல்வேறு நெருக்கடிகளையும் அவர் விமர்சித்தார்.

அரியாலையில் அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்படும் மக்கள் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதி -

யாழ் மாநகரத்தில் 15 வீத நிலத்தை இந்த உயர்பாதுகாப்பு வலயம் விழுங்குகிறது என்று சுட்டிக்காட்டினார். . முதற்கட்டமாக மாநகரத்தின் மூன்று வட்டாரங்களிலும் மக்கள் பூரணமாக குடியமர படையினர் அனுமதியும் ஒத்துழைப்பும் கொடுத்து தமது பெரிய முகாமை மேலும் தெற்குப்பகுதிக்கு நகர்த்தி (Relocating) உதவ வேண்டும் என அப் பிரதிநிதி ஆலோசனை கூறினார்.

சிறான் அமைப்பின் உடுவில், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதிநிதியான சூ.சிறில-

யாழ்ப்பாணத்தில் 13 உயர்பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. இதனால் 30,880 குடும்பங்கள் 29,525 வீடுகளை இழந்துள்ளனர். 12,257 ஏக்கர் பயிர்விளையும் நிலம், 40 சிறிய, பெரிய தொழிற்சாலைகள், 16 சிறிய, பெரிய பாடசாலைகள் என்பன செயலற்று முடங்கியுள்ளன. மக்கள் தெருவில் அலைகின்றார்கள். சரியான நஷ்டஈடுகளோ, நிவாரணங்களோ அரசாங்கம் வழங்குவதில்லை. மக்கள் தமது சொந்தக்காலில் தமது பொருளாதாரத்தை நிலைநிறுத்த தமது சொந்த இடங்களுக்கு திரும்பவே விரும்புகின்றனர் என்றார்.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக எமது தொழிலாளர்கள் கடலுக்குச் சென்று தொழில் செய்ய முடியாத வேளையில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து எமது கடல்வளத்தை கொள்ளையிடுகினறனர். எமது தொழிலாளர்களின் உபகரணங்களை அழித்து நாசமாக்குகின்றனர் என்பதையும் சிறில், நம்பியாரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

சங்கானைப் பிரதேச முன்னாள் உதவி அரசாங்க அதிபர் சந்திரராசா - பொன்னாலை மூளாய் பிரதேச மக்கள் சார்பில் கருத்துக்களை முன்வைத்தார். 800 குடும்பங்களைக் கொண்டிருந்த மூன்று கிராமங்கள் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்றார்.

தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் - உயர் பாதுகாப்பு வலயங்கள் மக்களின் பாதுகாப்புக்கு எவ்வகையிலும் உதவப் போவதில்லை. இராணுவத்தினர் குடாநாட்டைவிட்டு முழுமையாக வெளியேற வேண்டும் என்பதே மக்களின் பூரண விருப்பமாகும் என்றார்.

இறுதியாக கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தணிப்பு (DEESCALATION) அவசியமமெனில், சமாதான சூழல் இப்போதிருந்தே கட்டியெழுப்பப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

### உயர் பாதுகாப்பு வல...

சில நாட்களுக்குள் நான் பெரும் அதிசயங்களையோ, பெரும் காரியங்களையோ நிகழ்த்திட முடியாது.

பலர் என்னை விரும்பலாம். இன்னும் பலர் என்னை வெறுக்கலாம். ஆனால் நான் எனது வரையறைக்குள் நின்று கொண்டே எனது ஆலோசனைகளை முன்வைக்க முடியும். வரையறைக்குள் நின்று கொண்டு என்ன செய்ய முடியுமோ அதையே செய்ய முடியும்.

நான் இந்திய அரசின் பேச்சாளரோ, பிரதிநிதியோ அல்ல. ஒவ்வொருவரையும் நான் திருப்திப்படுத்த முடியாது. ஆனால், சம்பந்தப்பட்ட தரப்புக்களைச் சேர்ந்த ஆகக் கூடியளவு எண்ணிக்கையானோரை திருப்திப்படுத்த நான் முயற்சிப்பேன்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் மூன்று பரிமாணங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசியல் சார்பிலான பரிமாணம்.

மனிதாபிமான அடிப்படையான பரிமாணம்.

பாதுகாப்பு இராணுவ விவகாரங்கள் அடிப்படையான பரிமாணம்.

-ஆகியவையே இம்மூன்றுமாகும்.

அரசியல் சார்பிலான பரிமாணம் பற்றி நான் அக்கறை காட்டப் போவதில்லை. அது அரசியல்வாதிகளுடன் சம்பந்தப்பட்டது.

மேலும் - இது ஒரு மனிதாபிமான அடிப்படையில் இனங்காணப்பட வேண்டிய விடயம் என நாம் ஒவ்வொருவரும் உங்களைப் போலவே அடையாளம் காணுகிறோம்.

உங்கள் தரப்புக்கு இது சரியானது. ஆனால், எனது பார்வையில் மூன்றாவது பரிமாணத்தை நீங்கள் அலட்சியப்படுத்தக் கூடாது என்றே நான் கோருகின்றேன். நாம் இதை முழுமையாக ஒதுக்கிவிட முடியாது என்றே கருதுகின்றேன். இதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை அலட்சியப்படுத்தினால் அமைதி முயற்சிகள் ஆபத்திற்குள்ளாகும். இதை நாம் நினைவுபடுத்தியாக வேண்டும்.

உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தில் மீள்குடியமர்வு விவகாரம் கட்டங்கட்டமாகவே மேற்கொள்ளப்படலாம். இன்று நீங்கள் எழுப்பிய வினாக்களுக்கு நான் உடன் விடை தரமுடியாது. உங்கள் அறிக்கைகளைப் பெற்றுள்ளேன். நீங்கள் கூறியவற்றை குறித்துள்ளேன். எனது மதிப்பீட்டில் இது பற்றி கவனம் செலுத்துவேன்.

இப்போது நான் உங்கள் கேள்விகளுக்கு பதில் தரமுடியுமாக இருந்தால் - நான் உங்களை ஏமாற்றுவதாக இருக்கும்.

உங்கள் கருத்துக்களை அறியும்படி உங்கள் அரசாங்கம் என்னைக் கேட்டுக்கொண்டதனால் இங்கு வந்து உங்கள் கருத்துக்களை அறிந்து கொண்டேன்.

-என்றார் நம்பியார்.

### பாதுகாப்பு...

அவ்வாறு அல்ல என்றார்.

தொடர்ந்தும் அவர் பேசும்போது-

நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவிருந்தபோதும் அகதி அரசியல்வாதியென்றே என்னைச் சொல்ல முடியும். எனது சொந்த இடம் வலிகாமம் வடக்கிலுள்ள மாவிட்டபுரம். அங்கு எமது வீடுகள் குடியிருப்புக்கள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்டு பல்லாண்டுகள் உருண்டோடிவிட்டன. நான் கொழும்பிலோ அல்லது எங்கு வாழ்ந்தாலும் அகதியே என்று கூறினார்.

உயர்பாதுகாப்பு வலயத்தால் மக்களின் அபிவிருத்தி முற்றாக முடக்கப்பட்டுள்ளது. மக்கள் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். இடம் பெயர்ந்து வன்னி, கொழும்பு போன்ற இடங்களுக்கு சென்ற மக்கள் மீளத்திரும்புகின்றனர் அவர்கள் குடாநாட்டுக்குள் இடம்பெயர்ந்து வேறு வீடுகளில் தங்கியிருப்போரை வெளியேறுமாறும் தமது சொந்த வீடுகளில் தாம் குடியேறப்போவதாகக் கேட்கின்றனர், இந்நிலையில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் தமது வீடுகளை இழந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அவதியுறுகின்றன.

1985 ஆம் ஆண்டிலிருந்து வலிகாமம் வடக்கிலிருந்து மக்களின் வாழ்க்கை வேரோட்டம் பிடுங்கியெறியப்பட்டது. நம்பியார் அந்த இடங்களுக்கெல்லாம் சென்று பார்த்திருப்பார்.

காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருந்தனர். ஏனையோர் விவசாயம், மீன்பிடி ஆகியவற்றின் மூலம் பொருளாதாரத்தை வளர்த்தனர். இன்று எதுவுமில்லை தமது கொள்வனவு வலுவை (Purchasing Capasity) இழந்து வறுமைப்பட்டு விட்டனர்.

நம்பியார் ஒரு பாதுகாப்பு நிபுணர். அவர், உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தை வெறும் இராணுவ உபாய விடயமாகப் பார்க்கக் கூடாது.

இது இலங்கைப் படைகளினதோ அல்லது விடுதலைப் புலிகளினதோ இராணுவ விவகாரமல்ல. முற்றிலும் இடம்பெயர்ந்து அகதிவாழ்வு வாழும் சாதாரண அப்பாவி மக்களின் சிவில் விவகாரம் (Matter of Civil Society).

தமது சொந்த இடங்களில் தாம் குடியேற வேண்டும் என்று கேட்பதற்கு மக்களுக்கு சகல உரிமைகளும் உண்டு.

லெபரினன்ட் ஜெனரல் நம்பியாரின ஆலோசனை வடிவங்கள் ஆரோக்கியமானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் நேர்மைத்தன்மையுள்ளதாகவும் இருக்கும் என எதிர்பார்க்கிறோம். அவ்வாறு இருந்தால் இந்தியர்களுடனும் இந்தியாவுடனும் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் கட்டிவளர்க்க ஆவலுறும் எமது மக்களின் அபிலாசைகளுக்கு அது ஒரு தொடக்கமாக அமையலாம் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

### பொது அமைப்பு...

யாழ்.அரச அதிபரின் அலுவலகத்திற்கு சென்ற சதீஸ் நம்பியாரை யாழ்.அரச அதிபர் கைலாகு கொடுத்து வரவேற்றதையடுத்து சந்திப்பு ஆரம்பமாகியது.

யாழ்.அரசாங்க அதிபர் பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற சந்திப்பின்போது, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ரவிராஜ் ஆகியோரும், யாழ். பிராந்திய இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, யாழ்.பிராந்திய ராணுவ துணைக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ரட்ணசபாபதி, வடக்கு கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் நந்தன துடுவத்த மற்றும் யாழ். பொலிஸ் அத்தியட்சகர், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### உயர் பாதுகாப்பு...

கொள்ளவிருக்கின்றார்.

இன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள சர்வமதத் தலைவர்களையும் சந்தித்து உரையாடவிருக்கின்றார். அதனைத் தொடர்ந்து நண்பகல் வடபகுதியில் செயற்படுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் , மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர் உரையாடவுள்ளார். (க)

இச்சந்திப்பின்போது- யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ரவிராஜ், கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு பேணாட், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் பரமநாதன், யாழ். பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில், தென்மராட்சி மக்கள ஒன்றியத் தலைவர், அரியாலை கொழும்புத்துறை மக்கள் ஒன்றியத் தலைவர், பொன்னாலை மக்கள் ஒன்றியம் சார்பாக முன்னாள் பிரதேச செயலாளர் சந்திரராஜா, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் ஆகியோர் தமது தரப்புக் கருத்துரைகளை எடுத்துக் கூறியதுடன் மக்கள் ஒன்றியங்கள் சார்பாக மகஜர்களையும் சதீஸ் நம்பியாருக்கு சமர்ப்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து சதீஸ் நம்பியாரும் உரையாற்றினார். பின்னர் மாலை 4.30 மணியளவில் இச்சந்திப்பு நிறைவடைந்தது. நேற்றைய நிகழ்வுகளில் உள்ளூர், கொழும்பு மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்களும் வருகைதந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க,லி,ரா)

### நினைவு...

பொதுமக்கள் நிறுவியுள்ளனர் . இந் நினைவுத்தூபியை திரை நீக்கம் செய்ய முடியாது என கடற்படையினர் தடுத்து வருகின்றனர். நினைவுத்தூபியை எவர் தடுத்தாலும் தாம் இன்று திறக்கப்போவதாக பொதுமக்கள் உறுதி கொண்டுள்ளனர். இதனால் பதற்றநிலையொன்று உருவாகியுள்ளது.


## வீடு வாடகைக்குத் தேவை

மருத்துவபீட மாணவர்கள் தங்கியிருந்து கல்விகற்பதற்கு அவசரமாக வீடுகள் அல்லது அறைகள் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. எமது அவசர தேவையறிந்து வீடுகள் அல்லது அறைகள் கொடுத்து உதவுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு :-
☞ மருத்துவ மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாணம்.
☞ தொலைபேசி இலக்கம் 2134
☞ விரும்பிய வாடகை கொடுக்கப்படும்.

மருத்துவ மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(230)


## மரண அறிவித்தல்

'கலா பூஷணம்' - 'சங்கீத பூஷணம்'

### இராசம்மா மரியாம்பிள்ளை

கரவெட்டியைச் சேர்ந்த கலாபூஷணம், சங்கீத பூஷணம் திருமதி இராசம்மா மரியாம்பிள்ளை (முன்னாள் ஆசிரியை - யாழ்.சென். ஜேம்ஸ் ம.வி.பண்டாரவளை சிறுமலர் கன்னியர் மடம், கரவெட்டி - திருஇருதயக் கல்லூரி) கடந்த 3ஆம் திகதி கரவெட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோக்கீம் (கோலாலம்பூர் ஓவசியர்), சுவானப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், ஓய்வு பெற்ற அதிபர் சு.மரியாம்பிள்ளையின் (இராசு) அன்புத் துணைவியும், கனகமணியின் (நெதர்லாந்து) அன்புச் சகோதரியும், ரூபன் (தினக்குரல் - கொழும்பு), சுபேந்திரன் (அருள் ஊற்று - கண்டி), வரதராஜன் (சக்தி T.V), ராஜினி (அபடீன் பல்கலைக்கழகம் - ஸ்கொட்லாந்து) காலஞ்சென்ற தீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தி, செல்வராணி (சென். பற்றிக்ஸ் கல்லூரி, தலவாக்கலை) ஜெஸ்லின் (இந்துக் கல்லூரி - இரத்மலானை), வின்ஸிலி போல் (ஸ்கொட்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரூபன் (இந்துக் கல்லூரி - பம்பலப்பிட்டி) சாளுக்கியா (சென்.பற்றிக்ஸ் - தலவாக்கலை), கிஷாளன் (சென். தோமஸ் கல்லூரி, கல்கிசை), வனிஷ்கா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று வியாழக்கிழமை (06.02.2003) பி.ப.3.00 மணிக்கு கரவெட்டியில் நடைபெறும்.

புனித அந்தோனியார் கோவிலடி, கரவெட்டி.
தொ.பே.இல:- 0777 - 277324.
021 - 2263035.

தகவல்
எஸ்.எம். வரதராஜன்.

(சி/562)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.